Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 01 திங்கட்கிழமை (16.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 076

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

03



தேர்தல் களத்தில்

18



தன்னடக்கம்

## பிதிர்க்கடனை நிறைவேற்ற கடலுக்குள் இறங்கியவர் மாயம்


(புதுமாத்தளன்)

உறவினரின் பிதிர்க்கடனை நிறைவேற்றக் கடலுக்குச் சென்ற குடும்பஸ்தர் கடலின் சுழியில் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமற்போயுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் முல்லைத்தீவு, புதுமாத்தளன் கடற்பரப்பில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு, இரண்டாம் வட்டாரம் திம்பிலிப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவசீலன் (வயது-30) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமற்போனவராவார்.

உறவினரின் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்காக கடலில் இறங்கியவேளை வேகமாக வந்த கடல் சுழியால் அவர் இழுததுச் செல்லப்பட்ட நிலையில் காணாமற்போயுள்ளதாகவும், அவரைக் கண்டுபிடிக்க தேடுதல் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(கே)

## விடைபெற்றார் மண்டேலா




தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரான நெல்சன் மண்டேலாவின் உடல் நேற்றைய தினம் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

கோசா பழங்குடியின மரபுகளின்படி, நாட்டின் கிழக்கு கேப் மாகாணத்தில் மண்டேலா சிறு வயதில் வாழ்ந்த கூனு பகுதியில் அவரது குடும்பத்தினருக்குச் சொந்தமான நிலத்தில் அவரது நல்லடக்க நிகழ்வு நடைபெற்றது.

நல்லடக்க நிகழ்வில், மண்டேலாவின் வாழ்க்கை மற்றும் சாதனைகளைப் போற்றும் வகையிலான பாடல்கள் இசைக்கப்பட்டு, கவிதைகள் வாசிக்கப்பட்டன. முன்னதாக, அரச மரியாதையுடன் கூடிய இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் ஆபிரிக்க நாடுகளின் தலை

19 பக்கம் பார்க்க...

# 1417 பட்டதாரி பயிலுநர்களுக்கு யாழ்,கிளி.இல் நிரந்தர நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக அபிவிருத்தி உதவியாளர்களாகக் கடமையாற்றி வந்த ஆயிரத்து 417 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நேற்றைய தினம் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிதிகளாகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்ரி அலன்ரின் (உதயன்) ஆகியோரினால் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன., இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டவர்கள் ஏற்கனவே யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள்

19 பக்கம் பார்க்க...

## காணாமற்போனோர் குறித்து 10,500 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

காணாமற் போனோர் குறித்து இதுவரை 10 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக காணாமற் போனோர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைககுழு தெரிவித்துள்ளது. இதில் பொது மக்கள் காணாமற்போனமை தொடர்பிலான 6 ஆயிரத்து 517

19 பக்கம் பார்க்க...

## இராணுவத்திற்கு காணிகள் சுவீகரிப்பதை எதிர்க்கிறோம்

### சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

இராணுவத் தேவைகளுக்காக மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்கான தீர்மானத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.


அந்தக் காணிகள் அந்த மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். அது சம்பூராக இருந்தால் என்ன, வலி. வடக்காக இருந்தால் என்ன.

ஆகவே, இந்த விடயத்தில் நான் அந்தக் காணிகள் மக்களிடம் சென்றடைவதைத்தான் வலியுறுத்துகின்றேன். அபிவிருத்தி என்பது வேறு, இராணுவத் தேவை என்பது வேறு. அபிவிருத்திக்காக காணி சுவீகரிப்பதை

19 பக்கம் பார்க்க...

## ஆபிரிக்க நாடுகளுடனான உறவு இலங்கைக்கு முக்கியமானது

### வெளிநாட்டுக் கொள்கையும் அதுவே - ஜனாதிபதி



ஆபிரிக்கா மற்றும் ஏனைய வலய நாடுகளுடனான நீண்ட கால நட்புறவைப் புதுப்பிப்பதே இலங்கையின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கையாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாம் 2005 ஆம் ஆண்டு முதற்தடவையாக பதவியேற்றதன் பின்னர் இந்தக் கொள்கையே பின பற்றப்படுவதாக ஜனாதிப்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

கென்யாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை நைரோபியில் உள்ள கென்ய ஜனாதிபதி மாளிகையில் அந்நாட்டு ஜனாதிபதி உஹூரு கென்யாட்டாவுடன் இரு. தரப்புப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம்

19 பக்கம் பார்க்க...

## இலங்கைத் தமிழரின் சுயமரியாதை உறுதி செய்ய வேண்டும் இந்தியா

### நிருபமாராவ் வலியுறுத்து



இலங்கையிலுள்ள தமிழ் சிறுபான்மை மக்களின் சுயமரியாதையை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார செயலாளர் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் நடைபெற்ற சொற்பொழிவொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தியா ஒரு வலுவான அயல் நாடு. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்துள்ள நிலையில், நல்லிணக்கத்தை ஏற்படுத்த வரலாற்று ரீதியான ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

அண்டைய நாடுகளில் இருந்து எழும் சவால்களுக்கு இந்தியா தந்திரமான மற்றும் மூலோபாயமான மறுமொழிகளை வழங்க வேண்டும்.

தெற்காசியாவில் இந்தியா, மத்திய நிலையில் உள்ளது.

தீவிரவாதம் மற்றும் ஆயுத பரவல் காரணமாக சூழவுள்ள பிராந்தியங்கள் கடுமையானதாக மாறிவிட்டது. இந்த சூழ்நிலையில் சரியான கட்டுப்பாட்டுடன் கூடிய கலவையான வலிமை மற்றும் மூலோபாயம் தேவைப்படுவதாக நிருபமா

19 பக்கம் பார்க்க...

## இலங்கை மீதான குற்றச்சாட்டு கருத்து வெளியிட ஜப்பான் மறுப்பு

இலங்கை மீதான யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டு குறித்து கருத்து வெளியிட முடியாது என ஜப்பான் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் மார்ச் மாதம் பிரித்தானியா தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்டால் அந்த நேரத்தில் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என ஜப்பான் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை விவகாரம் குறித்து பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக அண்மையில் இலங்கை

19 பக்கம் பார்க்க...

# சொத்துக்களை சேதப்படுத்திய 18 பேருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

(கரணவாய்)

கரவெட்டி மேற்கு இராஜ கிராமம் பகுதியில் பொது மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் சொத்துக்களை சேதப்படுத்தி அச்சுறுத்திய 18 பேருக்கு நீதிமன்றத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட 14 பேரையும் கரணவாய் மத்தி, கரவெட்டி பிரதேசத்திலும் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபட்ட 4 பேரையும் நெல்லியடிப்பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் அஜர்ப்படுத்தினர்.

குற்றவியல் சட்டக் கோவை 81 ஆம் இலக்க பிரிவின் கீழ் வழக்கு விசாரணை இடம் பெற்றது. இதன்போது பதில் நீதிபதி இவர்களை கடுமையாக எச்சரித்ததுடன், குற்றத்துக்காக தினமும் இரவு 6 மணி முதல் 9 மணி வரை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறு தீர்ப்பளித்தார்.

மேலும் இத்தவறுகளை மீண்டும் செய்தால் இவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பதில் நீதிபதி நெல்லியடிப் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். (18)

# விளக்கமறியல்

(கரணவாய்)

கரவெட்டி அண்ணாசிலையடிப் பகுதியில் தனது வாகனத்தால் இன்னொருவரை மோதியும், கூரிய ஆயுதத்தால் குத்தி துன்புறுத்திய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் வாகன உரிமையாளரை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பதில் நீதிபதி குறித்த நபருக்கு பிணை வழங்க தீர்மானித்த நிலையில் நெல்லியடிப் பொலிஸார் இவருக்கு பிணை வழங்குவதை ஆட்சேபித்ததையடுத்து நீதிபதி இவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (18)

# ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை பஞ்சரதப் பவனி

(யாழ்.நிருபர்)

'ஈழத்து சிதம்பரம்' என்று போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவை முன்னிட்டு பஞ்சரதபவனி இடம்பெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான திருவெம்பாவைக்கால திருவாதிரை உற்சவத்தில் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் பெரும்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டவண்ணமுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவிலும், பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளைய தினம் அதிகாலை முதல் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று 7 மணிக்கு மாணிக்க வாசகர் எழுந்தருளி திருவெம்பாவை ஓதி 8 மணிக்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசைகளைத் தொடர்ந்து நடராஜப்பெருமான் பரிவாரமூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருள்வார். தொடர்ந்து பஞ்சரதப் பவனி இடம்பெறும்.

தேர்த்திருவிழாவுக்கு வருகைதரும் அடியார்களுக்கு மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையினரும், மகேஸ்வரன் அறப்பணி நிலையமும் அன்னதானம் வழங்கவுள்ளனர். காரைநகர் பிரதேச சபை குடிநீர், சுகாதார வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து ஆலயம் வரை நேரடி பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன. (10)

# சிவனொளிபாத யாத்திரை இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவனொளிபாதமலை யாத்திரை இன்று உத்துவ பூரணை தினமான திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி சிவனொளிபாதமலை யாத்திரை பருவகாலத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரத்தினபுரி மெல்பதுளை, கல்பொத்த, ரஜமகா விகாரையில் இருந்து புனித விக்கிரகங்கள் இரத்தினபுரி பாதை வழியாக சிவனொளிபாதமலை உச்சிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

ஹட்டன் மற்றும் இரத்தினபுரி பாதை வழியாக யாத்திரிகர்கள் வருகைதரவுள்ளதால் மலை அடிவாரங்களில் கடைகள் பல திறக்கப்பட்டுள்ளன.

இங்கு வருகைதரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் மலசல கூட வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதேசசபைத் தலைவர் வெள்ளையன் தினேஷ் தெரிவித்துள்ளார். (10)


# நல்லூர் பிரதேச சபையின் வாசிப்பு மாத நிகழ்வு

நல்லூர் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிறைவுநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் கடந்த வியாழக்கிழமை கொக்குவில் சம்பியன்வீதி, வளர்மதி சனசமூக நிலையத்தில் தவிசாளர் ப.வசந்த குமார் தலைமையில் நடைபெற்றது.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினர்களாக கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன், திருநெல்வேலி தேசிய வாசிப்பு வங்கி முகாமையாளர் திருமதி சி.தயானந்தன், திருநெல்வேலி றோ.ம.த.க.பாடசாலை அதிபர் கே.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வரவேற்புரையை நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் நிகழ்த்தினார். போட்டியில் வெற்றிபெற்ற 300 மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டு சேமிப்புப் புத்தகங்கள் நல்லூர் பிரதேச சபையினால் அவர்களுக்கு வழங்கப்பட்டன. (137)

# காரைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளக வீதிகள் புனரமைப்பு



காரைநகர் பிரதேசத்தில் உள்ளக வீதிகளான சுந்தர மூர்த்தி திக்கரை வீதி, மணியம் வீதி உள்ளிட்ட பல வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி மக்கள் வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்த நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான கண்ணனின் முயற்சியினால் காரைநகர் ஒருங்கிணைப் புக்குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினின் அனுமதியோடும், பிரதேச சபையின் முன்மொழிவுகள் அங்கீகாரத்தோடும் இவ்வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன.

பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவர் கண்ணன் வீதிப் புனரமைப்புக்கான மூலப்பொருட்களை சரிபார்த்ததோடு அதன் தரத்தையும் உறுதிப்படுத்தினார்.

சிதம்பரமூர்த்தி கேணி வீதி, சாம்பலோடை வீதி, கேசடை வீதி, மணியம் வீதி, செம்பாட்டு வீதி, மருதபுரம் வீதி, அல்வின் வீதி, மணற்காடு முத்துமாரி அம்மன் வீதி, வேதரடைப்பு வீதி, பயிர[illegible] வீதி, சக்கலாவோடை வீதி, பொன்னம்பலம் வீதி, சிவகாமி அம்மன் கோயில் வீதி, பழைய கண்டி - சிவன்கோவில் வீதி, தோப்புக்காடு வைரவர் கோவில் வீதி, பத்தர்கேணி களவிலிப் பிட்டி வீதி ஆகிய வீதிகள் யாவும் செப்பனிடப்பட்டுள்ளன. மேலும் 2014 ஆம் ஆண்டு ஏனைய வீதிகள் செப்பனி[illegible]டவுள்ளதாகவும், அமைப்பாளர் தெரிவித்தார்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2487 திகதி 14-12-2013

ஆங்கில எழுத்து: H

வெற்றி எண்கள்: 20 30 41 62

போனஸ் இல: 06

ஜக்பொட் பரிசு ரூ.17,692,775/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 218834 | 20/- | 4,376,680/- |
| 2 இல | 15611 | 100/- | 1,561,100/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8922 | 40/- | 356,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 687 | 1,000/- | 687,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,692,775/- | - |
| 1 இல + போனஸ் இல | 10503 | 100/- | 1,050,300/- |
| 2 இல + போனஸ் இல | 505 | 500/- | 252,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 424 | 200/- | 84,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 26 | 1,500/- | 39,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 255861 | | 10,458,260/- |

[illegible] நிற டிக்கட்டுகள் 2013.12.18 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,290,450/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3112)


# மானிப்பாய் லியோ கழகத்தின் பார்த்தீனிய ஒழிப்புத் திட்டம்

(மானிப்பாய்)

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கைகளின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 8.30 மணியளவில் சண்டிலிப்பாய் பகுதியில் இடம்பெறவுள்ளது.

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன எல்லைக்குள் பார்த்தீனியத்தை ஒழிப்போம் என்னும் தொனிப்பொருளில் இவ் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் இனங்காணப்பட்ட பகுதிகளில் பார்த்தீனியம் முழுமையாக ஒழிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இம் மாதம் பார்த்தீனியம் ஒழிப்பு மாதமாக வடமாகாண விவசாய மற்றும் கால்நடை அமைச்சினால் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

துறை சார்ந்தவர்களையும், ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து இவ் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது (48)


## வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் பல குடிமனைகள் சூழவுள்ள பாதுகாப்பான இடத்திலுள்ள ஒரு குடியிருப்புக் காணியும், அதிலுள்ள வீடும் விற்பனைக்குண்டு. பெண்கள் தலைமையிலுள்ள குடும்பத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : கனகர்
சீவறட்ணம் (சிவராசா)
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.

(R/329)


# நிலா முற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் குறும்திரைப் படங்களின் வருகையும், மீள்பார்வையும் என்ற தொனிப்பொருளில் நிலா முற்றம் பகுதி 18 என்ற நிகழ்வு இன்று மாலை 4.30 மணி தொடக்கம் 6 மணி வரை இல,128, பிறவுண் வீதியில் உள்ள Nation Popular Travels & Tours நிறுவனத் தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் குறும் திரைப்பட இயக்குனர்கள், கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.



'இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்'

"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயாங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# இலைமடிச்சுக்கட்டி நோய்தாக்கம்

# நெற்செய்கை பாதிக்கும் அபாயம்

## கிளிநொச்சி விவசாயிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது மடிச்சுக் கட்டியின் தாக்கத்தினால் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் அபாயம் காணப்படுவதாக இம்மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் ஈரப்பதனுடன் கூடிய மந்தமான காலநிலையால் இந்நோய் பீடைத்தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் பெரும்பாலான வயல்களில் மடிச்சுக் கட்டியின் தாக்கம் பரவி வருவதினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நோய்த்தாக்கம் தீவிரமடைவதால் பயிரின் இலைப்பரப்பில் பாதிக்கப்பட்டு உணவுத்தொகுப்பு பாதிக்கப்படுவதுடன் விளைசலில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் அபாயமும் காணப்படுகிறது.

மேலும் நோய்த்தாக்கத்தால் வயல்களை அறுவடை செய்யாது கைவிடவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு யூரியா பசளையை ஒரு தடவையில் பயன்படுத்தாது மூன்று தடவைகள் பிரித்து பயன்படுத்துவதுடன் பயிரின் அடர்த்திகளைக் குறைத்துவிட்டும் வயல்களிலுள்ள களைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இந்நோய் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன் இரசாயன நாசினி பயன்பாட்டுடன் பீடைநாசினிகளில் ஒன்றினையும் விசிறலாம் எனவும் விவசாயிகள் இதனை கடைப்பிடிக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதியோர்களுடன் அனுபவ பகிர்வு

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 25 முதியோர்கள் அனுராதபுரம் மற்றும் வவுனியா முதியோர் இல்லங்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 5 மணிக்கு இல்ல வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். மீண்டும் இவர்கள் இரவு 9 மணிக்கு இல்லம் திரும்பினர்.

இவர்களுடன் 15 இல்லத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் சென்றிருந்தனர். பெண்கள், ஆண்களைக் கொண்ட இக் குழுவினர் யாழ்.மாவட்டத்துக்கு வெளியேயுள்ள முதியோர் இல்லங்களைப் பார்வையிட்டு அங்குள்ள முதியோர்களின் அனுபவங்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டதுடன் தமது அனுபவங்களையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

இப் பயணத்தின் மூலம் முதியோர்களும், உத்தியோகத்தர்களும் நிறைந்த பயனைப் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம், வவுனியா போன்ற முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டதுடன் அவ்வில்லங்களில் உள்ள முதியோர் கைதடி முதியோர்களின் சிறப்பியல்பு பற்றியும் தெரிந்து கொள்வதற்கு இப் பயணம் வழி வகுத்துள்ளதாக முதியவர்கள் தெரிவித்துள்ளனர். (137)


# விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்.நிருபர்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2014ஆம் மற்றும் 2015ஆம் ஆண்டுக்கான சுற்றுலாப்பொருளியல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா மற்றும் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்கான விண்ணப்பத்திகதி எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.


சுற்றுலாத்துறையில் தொழில் புரிபவர்களின் திறமைகளை வளர்க்கும் நோக்குடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இப்பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பாடநெறி வார இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதுடன் ஆங்கில மொழிமூலம் இக்கற்கை நெறிகள் நடைபெறும்.

பாடநெறிக்கான விண்ணப்பப்படிவங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறையில் அல்லது www.cmb.ac.lk/academic/arts/econ/dttemhm, www.sltda.lk. education என்ற இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்யமுடியும். (10)



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# மற்றவர்களின் மனதில் உள்ளதையும் மதித்தலின் அவசியம்




ஆனையிறவில் படையினர் ஒரு நினைவுத்தூபியைக் கட்டுகிறார்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவிலிருந்த படை முகாமைத் தாக்க வந்த புலிகளைத் தற்கொலைத் தாக்குதலின் மூலம் விரட்டியடித்த இராணுவ வீரர் ஒருவரின் நினைவாக இந்த நினைவுத்தூபியைக் கட்டுகிறார்கள்.

இந்த மாதிரி பல நினைவுத்தூபிகள் வன்னியின் பல இடங்களிலும் கட்டப்படுகின்றன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதெல்லாம் சரியாகவும் தேவை யாகவும் இருக்கும்.

ஆனால், இந்த நினைவுத்தூபிகளை வந்து பார்க்கிறவர்கள் எல்லோரும் சிங்கள மக்களாகவே இருக்கிறார்கள்.

மறந்தும் ஒரு தமிழர்கூட இந்தத் தூபிகளுக்குக் கிட்டவும் போவதில்லை.

அப்படியென்றால் நாடு இன்னும் இரண்டுபட்டுக் கிடக்கிறது என்றுதானே அர்த்தம்.

இந்த நினைவுத் தூபிகளைப் போல அங்கும் இங்குமாகச் சில இடங்களில் பௌத்த விகாரைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் இப்படிப் பலதும் பத்தும் இருக்கும். இவற்றைப் பெரிது படுத்தலாமா? என்று சிலர் கேட்கலாம்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல், அது போராக வெடித்து சமூகங்கள் மோதுண்ட ஒரு சூழலில் செய்திருக்க வேண்டிய காரியங்கள் இதை விட வேறு பல உண்டு.

அரசாங்கம் கொள்கையளவில் அதற்காக சில அமைச்சுகளைக் கூட உருவாக்கியிருந்தது.

ஆனால், எல்லாம் ஏட்டுச்சுரைக்காய் என்ற நிலையில்தான்.

ஒன்றுமே கறிக்கு உதவவில்லை.

மீள் குடியேற்ற அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு, தேசிய மொழிகள் ஒருமைப்பாட்டு அமைச்சு, சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு என்ற அமைச்சுகள் தங்களுடைய ஒரு கிளையைக் கூட பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வைத்திருக்கவில்லை.

ஏன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அலுவலகம் கூட இதுவரையில் வடக்குக் கிழக்கில் முறையாக இயங்கவில்லை.

இனங்களையும் சமூகங்களையும் இணைக்கின்ற கலாச்சார ரீதியிலான மையங்களோ, செயற்பாடுகளோ கூட இலங்கை முழு வதிலும் உருவாக்கப்படவில்லை.

பரஸ்பரப் புரிந்துணர்வுக்கான பிற நடவடிக்கைகளைக் கூட முறைப்படி யாரும் முன்னெடுக்கவில்லை.

இவற்றையே செய்திருக்க வேண்டும்.

இவற்றைச் செய்தால்தான் மக்களுக்கு அரசின் மீதும் அரசாங்கம் செய்கின்ற வேலைகளின் மீதும் நம்பிக்கை வரும்.

இதைப்பற்றிச் சிந்திப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கின்ற பல பத்து ஆலோசகர்களில் ஒருவருக்குக் கூட நேரமில்லை.

ஆனால், தெருவுக்குத் தெரு சந்திக்குச் சந்தி 'ஒரே நாடு ஒரே இனம்' என்று எழுதிய பென்னாம் பெரிய பெயர்ப்பலகைகள் மட்டும் வைக்கப்பட்டுள்ளன.

அமைதிக்கும் சமாதானத்துக்கும் செல்லவேண்டிய பாதை இப்படியான காரியங்களால் மட்டும் அமையாது.

அதற்கு அர்ப்பணிக்கும் நல்ல சிந்தனையுடன் கூடிய வழிமுறைகள் அவசியம்.

மற்றவர்களையும் மனதிற் கொள்ளும் எண்ணங்கள் வேண்டும்.

மற்றவர்களை மனதிற் கொள்ளாமல் அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றவர்கள் எல்லாம் வரலாற்றில் தோல்விகளையே சந்தித்தனர்.

அண்மையில் புலிகள் கூட தோற்றது இதனால்தான்.

மற்றவர்களை, மற்றவர்களின் மனதில் உள்ளதை மதிக்கத் தவறிய தன் விளைவே அவர்களை பொது அரங்கில் இருந்து அகற்றியது.

அந்த நிலையை எவரும் விரும்பக் கூடாது.

இது பல்லின நாடு என்றால் மற்றவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அதில் இடம் இருக்க வேண்டும்.

எல்லோருக்குமான இடமே ஒரு தேசத்தின் அமைதியின் ஊற்றிடம்.

அந்த ஊற்றில்தான் நாட்டின் சுபீட்சம் என்ற மரம் செழிக்கும்.

மகிழ்ச்சி என்ற மலர்கள் பூக்கும்.

உனது விடுதலைக்குரிய வழி பிறர் வசமில்லை. அது உன்னிடமே உள்ளது. - கௌதம புத்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்க்கை கொண்டாடுவதற்கானது!

உழைப்பே கடவுள் என்றுதான் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உழைப்பை நாம் வணங்கவே செய்கிறோம். உழைக்காவிட்டால் குற்ற உணர்ச்சிகொள்கிறோம். உழைப்பு, வேலை, முன்னேற்ற இலக்குகள் என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். இதுதான் மனித இயல்பாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் இது செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட திணிப்பு. மனித குலத்தின் இயல்பு இதுவல்ல என்கிறார் சமூகவியல் அறிஞரான ஜோன் செர்சான்.

அவர் அங்கம் வகிக்கும் "உழைப்பு, வேலை, பிரதிநிதித்துவம் மற்றும் நாகரிகத்துக்கு எதிரான தெற்காசிய கூட்டமைப்பு" இந்த இயல்பை கேள்விக்குள்ளாக்குகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாணவன் பரீட்சையில் 50% புள்ளிகள் எடுத்தால் அது பெரிய சாதனையாக கருதப்பட்டது. ஆனால் இன்று 100% புள்ளிகள் எடுத்தாலும் பெரிய செய்தியாக இல்லை.

ஐம்பதுகளில் குடும்பத்தில் ஒரு உறுப்பினர் வேலைக்குச் சென்றால் பலர் அடங்கிய பெரியு குடும்பத்தைக் காப்பாற்ற முடியும். ஆனால் இன்று கணவன், மனைவி இருவரும் தலா 12 மணிநேரம், பிற உறுப்பினர்கள் சுமார் 6 மணிநேரம் என ஒரு நாளைக்கு 30 மணிநேரம் இன்று வேலை செய்கிறோம்.

ஏன் இப்படி உழைப்புக்கு அடிமையாகிவிட்டோம்? தனிப்பட்ட சமூக வாழ்க்கைக்கு மனிதனுக்கு இன்று நேரமே இல்லை. கூடி மகிழ்தல், விளையாட்டு, விருந்தோம்பல் ஆகிய மனித இயல்புகளுக்கு இன்று இடமில்லாமல் போய்விட்டது. தொழில்நுட்பம் என்பது மனிதனுடைய வேலையைக் குறைப்பதற்காக உருவானது. ஆனால் நடந்தது என்ன?

இன்று மனிதன் வேலைநேரம் போக படுக்கையிலும், கழிப்பறையிலும்கூட வேலை செய்யும் நிலை வந்துவிட்டது. கீழ் நோக்கி வீழ்ந்துவிடுவோமோ என்ற அச்சத்தால் உயர் நடுத்தர வர்க்கம் பீடிக்கப்பட்டு, மேலும் மேலும் உழைத்துக் கொண்டிருக்கிறது.

நமக்கு முந்தைய சமூகம் இதைப் பற்றி கேள்வி எழுப்பாத தன் சுமையை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நமது எதிர்கால சமூகத்துக்காக இந்த உழைப்பு மேனியாவை கேள்விக்குள்ளாக்க வேண்டும் என்கிறது இந்த கூட்டமைப்பு.

மனிதகுலத்தின் இயல்பான குணங்கள் மாறிவிட்டன. வினோதமான புதிய புதிய தொழில்நுட்பங்கள் எல்லாம் வருகின்றன. எல்லாம் எதற்கு? நாம் நம்முடைய திறன்களை, லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்த உணர்வுகளை இழந்து கொண்டிருக்கிறோம்.

1980களுக்குப் பிறகு நண்பர்களே இல்லாத மனிதர்கள் எண்ணிக்கை மூன்று மடங்காக உயர்ந்துள்ளதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இந்த காலகட்டத்தில்தான் எல்லோரிடமும் செல்போன் வந்து சேர்ந்தது. உலகமே ஒரே குடும்பமாக, ஒரே கிராமமாக மாறிவிட்டது. ஆனால் இது உண்மையா?

இதற்கு மிகவும் நேரெதிராக இரூக்கிறது உண்மை நிலவரம். நாம் மேலும் மேலும் தனிமைப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். நமக்கு பேஸ்புக்கில் நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் நேரடி நண்பர்களை இழந்துவிட்டோம்.

நாம் அனைவரும் தொழில்நுட்பத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளோம். மக்கள் தங்கள் செல்போன்களைப் பார்த்த வண்ணம் பிணங்களைப் போல நடந்து கொண்டிருக்கிறார்கள். இது எல்லாவற்றையும் தூக்கியெறியுங்கள் என்று சொல்வது, இப்போது சுலபமல்ல.

ஆனால், மக்கள் விரைவில் இந்த செயற்கையான தனிமனித வாழ்வில் வெறுப்படைந்து விடுவார்கள். மாறுவார்கள். வாழ்க்கை உழைப்பதற்கும், கவலைப்படுவதற்கும், சக மனிதர்களை விலக்கி வைப்பதற்கும் உரியதல்ல; அது கொண்டாடுவதற்கு உள்ளது என்ற செர்சான் அவர்களது நம்பிக்கை பலிதமானால் நல்லதுதான்.

- ஆசிரியர்

# பௌத்த பிக்குகளைக் கண்டால் ஓடி ஒளிக்கிறார் ஹக்கீம்

## ஏன் எனக் கேட்கிறார் தேரர்

பிக்குகளைக் கண்டால் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஓடி ஒளிக்கின்றார் என அம்பாறை வித்தியானந்த மாகா பிரிவேனாவின் விகாராதிபதி சஞ்சிந்தரிய தேரர் தெரிவித்தார்.

சாரைப் பாம்புக்கு மண்ணெண்ணெய் பட்டால் ஓடி ஒளிவது போன்றே பிக்குவாகிய எங்களைக் கண்டால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஓடி ஒளிக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்ததல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கல்முனை வடக்கு தமிழ் மக்களுடன் கலந்துரையாடும் கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் இன்னும் ஒரு மாத காலத்தினுள் தரமுயர்த்தப்படும் என்பதில் எதுவித மாற்றமுமில்லை. இந்த விடயத்தில் பொதுமக்களாகிய நீங்கள் என்றும் நம்பிக்கையாக இருங்கள். இதனை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையுடன் செயற் பட வேண்டும். மதங்களின் அடிப்படையில் இரண்டு சமூகங்களும் ஒன்றுதான். ஆனால் இடைப்பட்ட காலத்தில் வந்த சில இடர்களினால் தமிழ், சிங்கள மக்களின் உறவுக்குள் விரிசல்கள் ஏற்பட்டன.

எனது குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள் 14 பேரை ஒரு நாளில் எல்.ரீ.ரீ.யினர் வெட்டிக் கொன்றனர். யுத்தத்தின் பாதிப்புக்கள் அனைவருக்கும் உண்டு தான் எனவே நாம் அனைவரும் பழையவற்றினை எல்லாம் மறந்து தற்போதைய சமாதான காலத்தில் அனைவரும் இணைந்து புதுயுகம் படைப்போம்.

தற்போதைய நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அரசியல் பிரச்சினை, காணிப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, நிருவாகப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் கடந்த கால யுத்தத்தினைக் காரணம் காட்டி தமிழ் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டன.

இதனை இனிமேலும் விட்டு விட முடியாது. முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்தின் பக்கமிருந்து அவர்கள் சார்ந்த சமூகத்திற்கு பல வேலைத்திட்டங்களை செய்து வருகின்றனர்.

ஆனால் அந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை வெறுத்து ஒதுக்கும் நோக்கத்துடன் பார்க்கக்கூடாது.

கல்முனையில் ஒரு தமிழ் பிரதேச செயலகம் அமைவதை முஸ்லிம் அரசியல்வாதிகள் எதிர்க்கின்றார்கள். இது ஏன் எனத் தெரியாதுள்ளது. எது எவ்வாறு அமைந்தாலும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு நாங்கள் எந்த நேரமும் தயாராக இருக்கின்றோம் என்றார்.

# பொருத்தமில்லாத சுற்றுவட்டம் மாற்றி அமைக்கக் கோரிக்கை

(யாழ்.நிருபர்)

மானிப்பாய் சந்தியில் அமைந்துள்ள சுற்றுவட்டம் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ளதுடன் அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பதில் தவிசாளர் எஸ். சிவகுமார், தற்பொழுது இருக்கும் சுற்றுவட்டத்தை சந்திக்கேற்றவாறு மாற்றியமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் காலப்பகுதியில் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள மானிப்பாய் சந்தியில் அமைக்கப்பட்ட சுற்றுவட்டம் வீதிகளின் அகலத்திற்கேற்றவாறு அமையாததினால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதுடன்.

அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே வானகப் போக்குவரத்துக்கு வசதியாகவும், விபத்துக்களைத் தடுக்கும் வகையிலும் வீதிகளின் அகலத்திற்கேற்றவாறு சுற்றுவட்டத்தை அமைக்குமாறு பதில் தவிசாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (10)

# யுத்த பாதிப்புகள் கணக்கெடுப்பு நிறைவு

(கொழும்பு)

யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான கணக்கெடுப்பு வடக்கில் நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது.

கடந்தகால யுத்தம் காரணமாக உயிரிழந்த மற்றும் காணமற்போனவர்கள், காயமடைந்தவர்கள் தொடர்பாகவும் உடமைகளுக்கு ஏற்பட்டசேதங்கள் தொடர்பாகவும் இப்போது கணககெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

இக்கணக்கெடுப்பு இந்தவாரத்துடன் நிறைவடையும் நிலையை எட்டியிருக்கிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுக்கு அமைய இந்தக் கணக்கெடுப்பு கடந்த மூன்று வாரங்களாக நாடு முழுவதும் இடம்பெற்றது.

# கஞ்சா செடியை வளர்க்க முடியுமா? சட்டத்தில் வருகிறது திருத்தம்

கஞ்சா செடிகளை வளர்க்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க இது தொடர்பிலான யோசனைத் திட்டமொன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளார்.

கஞ்சாச் செடிகளை வளர்ப்பது தொடர்பிலான தடையை தளர்த்தும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கஞ்சா செடிகளின் மூலம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த முடியும் எனவும் ஆயுர்வேத மருத்துவத்திற்கு கஞ்சா பயன்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, கஞ்சா போதைப் பொருளை மருத்துவ நோக்கங்களுக்காக வளர்க்கக் கூடிய வ்கையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. மருந்துப் பொருளாகக் கருதி கஞ்சாவை வளர்க்க அனுமதிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மருத்துவர்கள் கஞ்சா செடிகளை வளர்ப்பதற்கு அனுமதியளிக்கப்படக் கூடிய வகையில் சட்டத் திருத்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கஞ்சாவை உரியமுறையில் பயன்படுத்தினால் வெளிநாடுகளுக்குக் கூட வலி நிவாரணியாக ஏற்றுமதி செய்ய முடியும் என அமைசசர் சாலிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# தலையெடுக்கிறது ஊடக பயங்கரவாதம்

## மங்கள எம்.பி. சாடல்

நாட்டில் இன்று ஊடக பயங்கரவாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தப் பயங்கரவாதம் ஐக்கிய தேசியக்கட்சியை இலக்கு வைத்து வேலைகளை செய்கிறது. மாறாக அரசாங்கத்துக்கு எதிரான விடயங்களை இந்தப் பயங்கரவாதம் வெளிப்படுத்துவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஊடக முதலாளிகள் தமது அரசியல் காரணங்களுக்காக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரையான உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## 1986 டிசம்பர் 13 நினைவு நாள் குறிப்பு

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கெனப் போராட வந்து, 1986ஆம் ஆண்டு சகோதரப்படுகொலைகளில் கொல்லப்பட்டனர் பல நூற்றுக்கணக்கான போராளிகள். துரோகிகளாக முத்திரை குத்தப்பட்ட தமிழர்களால் தவிர மற்றப்படி அவர்கள் நினைவு கூரப்படுவதில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏப்ரலில் ரெலோ இயக்கம் புலிகளால் தடைசெய்யப்பட்டது.

யாழ் திருநெல்வேலியில் ரெலோ போராளிகள் குற்றுயிரும் குறை உயிருமாக எரிக்கப்பட்டபோது திருநெல்வேலி சந்தியில் அன்றைய கடைக்காரர்கள் இந்த தெருத் தாண்டவம் ஆடியவர்களுக்கு கொக்கக்கோகோலா உடைத்துக் கொடுத்த நாட்களில்



எம்மிடம் ஜனநாயக உணர்விருந்திருந்தால் தலைவர்கள், போரளிகள், கல்வியாளர்கள், மனித உரிமைவாதிகளின் இந்த பாரிய அழிவைத் தடுத்திருக்க முடியும்.

அவர்கள் எம்மத்தியில் இருந்திருந்தால் எத்தகைய வளம் அது. வாழ்வின் உன்னதத்தை தொடக் கூடிய அறிவும் அர்ப்பணமும் கருவூலமாக எம்மிடம் இருந்தது.

இன்றைய தலைமுறையினருக்கு நாம் எவற்றையெல்லாம் இழந்தோம், என்ன நேர்ந்திருக்கிறது என்று தெரியாது அதுபற்றிய பிரக்ஞையும் இல்லை. அதனை விளங்கவைப்பதும் கடினமான காரியம்.

இன்னும்பலர் என்றென்றைக்குமாக நாட்டை விட்டே சென்று விட்டார்கள்.

இன்று பிரிக்கப்பட்ட அதிகாரம் தேய்வடைந்த மாகாணசபையையும் வரலாற்றுணர்வற்ற பிரதிநிதிகளையும்

# போராட்டம் முள்ளிவாய்க்காலில் அவலமாக முடிந்ததற்கான வரலாற்றுத் தவறுகள்...

- சுகு-ஸ்ரீதரன்

**எம்மை, சக இயக்கங்களை தடைசெய்தபோது எத்தகைய அவமானமும் நிர்க்கதியுமான உணர்வுகள் வேதனைப்படுத்தியதோ அதே உணர்வுகள் யுத்தத்தின் இறுதி நாட்களில் சாதாரண போராளிகளின் மக்களின் துன்ப நிலை நரகவேதனை உணர்வை ஏற்படுத்தியது. பல ஆயிரக்கணக்கான துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டவர்களின் மனங்கள் இவ்வாறு தான் துன்புற்றன. ஆனால் ஆயிரக்கணக்கானவர்களை சிறுவர் பெண்கள் முதியவர்கள் என்ற பேதமில்லாமல் சங்காரம் செய்து விட்டு எந்த மனக்கிலேசமும் இல்லாமல் உண்டு உறங்கி நகைச்சுவை பேசும், வெற்றிப் பெருமிதம் பேசும் பிரகிருதிகள் மனித குலத்தின் பகுதியினர்தானா என்ற கேள்வி அடிக்கடி எழும்.**

துரோகி-தியாகி என்ற எல்லைக் கோடுகள் அழுத்தம் பெற்றன.

உலகத்தின் கடைக் கோடி காட்டுமிராண்டிப் பிரிவினரா நாம் என்ற கேள்வியை எழுப்பியது இந்தச் சம்பவம்.

இந்த கொக்கக்கோகோலா கதை பல மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகளில் பதிவிடப்பட்டு பல உள்ளூர் உலக ஊடகங்களில் இடம்பெற்ற பின்னரும் எமது தமிழ் ஜனநாயக ஊடகங்கள்(?) இன்றுவரை மூச்சுவிடவில்லை. சமூகத்திலும் அதுபற்றிய மனக்கிலேசம் இல்லை.

"எங்கடபொடியள்" என்ற வாஞ்சை அறுந்து விழுந்து துரோகி-தியாகி என்று பிரிவுகள் ஏற்பட்டன.

கொலைகளை பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளும் ஒரு கலாச்சாரப் பிறழ்வுக்காலம் இது என வர்ணிக்கலாம்.

இதன் தொடர்ச்சியாக ரெலோ, புளொட், பேரவை, ரெலா, என்எல்எப்ரி, பிஎல்எப்ரி, ஈ.பி.ஆர்.எல்.எப்., இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக்கட்சி தொழிற்சங்கங்கள் மனித உரிமை அமைப்புக்கள் என்பன படுகொலைகள் மூலம் தடைசெய்யப்பட்டன.

ஒரு பாசிச கரும்புகை வடக்கு கிழக்கு எங்கும் கவிந்தது.

ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கும் செயற்பாடு ஒரு தொடர் வரலாறாக நிகழ்ந்தது.

இந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் தான் ஈ.பி.ஆர்.எல்.எப். டிசம்பர் 13இல் தடைசெய்யப்பட்டது.

பலநூற்றுக்கணக்கானவர்கள் சுற்றிவளைக்கப்பட்டார்கள்.

தேசிய விடுதலைப்போராட்டம் என்றளவில் ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ ஆதரித்தவர்கள் தன்னும் விட்டுவைக்கப்படவில்லை.

வயது, பால் என்ற வேறுபாடு இருக்கவில்லை.

ஒரே ஒரு குற்றம் அவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றது, ஈடுபாடு செலுத்தியது. பலர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

இந்தக்காரியத்தை முன் நின்று நேரடியாக செயற்படுத்திய சிலர் மேற்கிலும் வட அமெரிக்காவிலும் சௌகரியமாக இன்றும் வாழ்கிறார்கள்.

போராடப் புறப்பட்டு சொந்த சமூகத்தினுள்ளேயே படுகொலை, சிறை, சித்திரவதைகளை அவமானங்களை எதிர்கொண்டவர்கள் கோபமும், பழி உணர்ச்சி, அவமானத்துடன் கொதித்துப்போயிருந்தார்கள்.

சமூகத்தின் விடிவிற்கென சகலதையும் துறந்து வந்த சாதாரண போராளிகள் தமது தரப்பிலிருந்தே துப்பாக்கி தமக்கெதிராக நீளும். இரத்த உறவுக்குளேயே சொந்த சமூகத்தினுளேயே கொல்லப்படுவதற்கான நிலை, தலைமறைவாக வாழவேண்டிய நிலை, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பி ஓட வேண்டியநிலை வருமென்று கனவிலும் நினைக்கவில்லை. ஏறத்தாழ கால்நூற்றாண்டு காலம் எமது போராட்டத்தின் லட்சணம் இதுதான்.

இயல்பான மனிதாபிமான உணர்வுடன் இவர்கள் தலைமறைவாக வாழ்வதற்கு உதவியவர்கள் கூட பயங்கரமான அனுபவங்களை சந்திக்க நேர்ந்தது.

யாழ் பத்திரிகைகளும், பிரபல தமிழ் ஊடகங்களும் சமூகவிரோதிகளை கட்டுப்படுத்திய செயல் போல் சித்தரித்தன.

1987 மார்ச் யாழில் ஒரு வீட்டில் அமைந்திருந்த சித்திரவதைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 57 பேர் பெருமளவுக்கு ஈபிஆர்எல்எப் மற்றும் புளொட், ரெலோ போராளிகள் ஆதரவாளர்கள் "ஜாலியன் வாலாபாக்" பாணியில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஜெனரல் டயரின் வேலையை அருணா மேற்கொண்டான்.

அந்தப் படுகொலை "கந்தன் கருணை" படுகொலை என அழைக்கப்பட்டது.

உண்மையில் அந்த படுகொலை நடந்த இடம் தற்போது உதயன் ரெஸ்ட் அமைந்திருக்கும் நீராவியடி கட்டிடப் பகுதியாகும்.

என்ன பிரச்சினை என்றால் 1983 இன வன்முறை, சர்வதேச மனித உரிமை தினம், நவம்பர் மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் நினைவு கூரப்படுவது மாதிரி முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து வெளியேற்றியதையோ அல்லது சகோதரப்படுகொலைகளின் மோசமான நாட்களையோ, கந்தன் கருணைப் படுகொலைகளையோ, சென்னையில், பிரான்ஸ் பாரிசில் நிகழ்ந்தவை பற்றியோ இது போன்ற பல பாரதூரமான மனித உரிமை மீறல்களையோ நாம் நினைவுகூரத் தயாரில்லை. அப்படி எதுவும் நடந்ததாகவும் எமது பிரக்ஞையில் இல்லை. எமது அறிவிலும் இல்லை.

எம்மை நாம் சுயவிமர்சனத்துடன் அணுகுவதற்கு தயாராக இல்லை. எமது செயல்களை சில நேரங்களில் நினைத்தால் மனம் கூனிக் குறுகிப் போகிறது. ஆனால் எமது சமூகத்தில் வெட்க உணர்ச்சி, நீதி, நேர்மை என்பன குறைவாகவே இருக்கின்றன. மற்றவர்கள் எமக்கு நேர்மையாக உண்மையாக இருக்கவேண்டும், நாம் அவ்வாறிருக்க தேவையில்லைஎன்பதே எமது சமூக மனோ நிலையாகும்.

நாம் அனுராதபுரத்தில் அரசமரத்தின கீழ் மேற்கொண்டவற்றையும் இன்னும் பல ஜனநாயகவிரோத படுகொலைகளையும் நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள்.

ஈழப்போராட்டம் என்று சொல்லி வடக்கிலும், கிழக்கிலும் மலையகத்திலும் இருந்து ஆட்களைத் திரட்டி நட்டாற்றில் விட்டவர்கள், ஈழத்தில் எமக்கு உதவி அழிந்து போனவர்களையெல்லாம் மறந்தவர்கள் என்ற மனக்கிலேசமெல்லாம் எமக்கில்லை.

ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் போராட்டத்திற்கென தமது உழைப்பையும் பொருளையெல்லாம் தானமாக்கி யவர்கள் கந்தறுந்து நொந்து போயிருக்கிறார்கள். வசூல் ராஜாக்கள் சத்தம் சந்தடி இல்லால் குபேரவாழ்வு வாழ்கிறார்கள்.

இங்கு குற்றுயிராக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் எதனையும் பெறவில்லை. வாழ்வு பாழ்பட்டு வறுமை மிஞ்சியது.

நான் இங்கு நாம் என்று கூறுவது எம்மையெல்லாம் ஆக்கிரமித்துள்ள யாழ் மேலாதிக்க சிந்தனையையே. இதனால் நாம் பிணியாளர்களாக இருந்து கொண்டிருக்கிறோம்.

எல்லாருடைய இழப்புக்களையும் நாம் மூலதனமாக்கியிருக்கிறோம். எமக்குப் பெருவாரியாக புலம்பெயர்வாழ்வு கிடைத்திருக்கிறது. எம்மைப் பார்க்க கமரூன் கூட வருகிறார்.

கிழக்கும் எமது பகுதிதான் என்று அவ்வப்போது ஒப்புக்கு "ம்"மன்னா போட்டு கிழக்கைப் பற்றி பேசும் நிலை தான் எமது ஆதிக்க அரசியல்.

போராடப் புறப்பட்டு இறந்தவர்கள் எல்லாம் துரதிர்ஸ்டசாலிகளாகப் போனார்கள்.

வைத்துக் கொண்டிருக்கிறோம்.

யாரையும் பழிதீர்ப்பதற்காக எழுத வரவில்லை.

எம்மை, சக இயக்கங்களை தடை செய்தபோது எத்தகைய அவமானமும் நிர்க்கதியுமான உணர்வுகள் வேதனைப் படுத்தியதோ அதே உணர்வுகள் யுத்தத்தின் இறுதி நாட்களில் சாதாரண போராளிகளின் மக்களின் துன்ப நிலை நரகவேதனை உணர்வை ஏற்படுத்தியது.

பல ஆயிரக்கணக்கான துரோகிகளாக

முத்திரை குத்தப்பட்டவர்களின் மனங்கள் இவ்வாறு தான் துன்புற்றன. ஆனால் ஆயிரக்கணக்கானவர்களை சிறுவர் பெண்கள் முதியவர்கள் என்ற பேதமில்லாமல் சங்காரம் செய்து விட்டு எந்த மனக்கிலேசமும் இல்லாமல் உண்டு உறங்கி நகைச்சுவை பேசும், வெற்றிப் பெருமிதம் பேசும் பிரகிருதிகள் மனித குலத்தின் பகுதியினர்தானா என்ற கேள்வி அடிக்கடி எழும்.

பல குழந்தைகளை நச்சுவாயுவுக்கு இரையாக்கிக் கொண்டு பல மில்லியன் மக்களை படுகொலை முகாம்களுக்கு அனுப்பிக்கொண்டு ஹிட்லர் எவ்வாறு நாளாந்தம் தன்னை அலங்கரிக்க முடிந்தது. உணவுட்கொள்ள முடிந்தது என்பது போன்ற விபரீதமான கேள்விகள் எல்லாம் எனக்குள் எழும்.

ஏனெனில் அவருக்கு சளைக்காதவர்கள் எம்மிடையேயும் வாழ்ந்தார்கள். வாழ்கிறார்கள்.

வரலாற்றில் நாம் இழைத்த தவறுகள் பற்றி உணர்வு எம்மிடம் இல்லாததும் எமது அவலம் நீடித்துச் செல்வதற்கு காரணம்.

இந்த அவலத்திற்கு துணையாக தமிழ் ஊடகங்கள் வகித்த பாத்திரத்தை மறைத்துவிட மறுத்து விட முடியாது.

துரோகிகள் தியாகிகள் என்று பிரமாண்டமான அளவில் உயிர்ப்பலி நிகழ்ந்தது. பிள்ளையார் சுழியே பிழையாக அமைந்து விட்டபடியால் எல்லாம் விழலுக்கிறைத்த நீராக.

எமது போராட்டத்தில் இருந்த நியாயத் தன்மை தார்மீக வலுபற்றி மீண்டும் மீண்டும் கேட்க வேண்டியிருக்கிறது.

- சமூகத்தினுள், சமூகங்களிடையே ஏற்படுத்தப்பட்ட கற்பிதமான பிரிவினை, வன்மம், குரோதம் உருவாக்கியதில்
- கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் விரயமாக்கியதில்
- போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இல்லாத இராணுவத்தை இப்போது எமது குடிமனைகளில் அமர்த்தியதில்
- பல எமது வாழ்விடங்கள் உயர் பாதுகாப்புவலயங்களாய்ப் போனதில்
- எமது பிரதேசங்களில் புதிய தலைமுறையினர் வாழ விரும்பாத சூழ்நிலையை ஏற்படுத்தியதில்

(18ஆம் பக்கம் பார்க்க)

# இராஜதந்திர யுத்தத்துக்கு தயாராகிறது அரசாங்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மாநாட்டுக்கான தயாரிப்பு வேலைகளில் அரசு இப்போது படு தீவிரமாக இறங்கியுள்ளது.

இராஜதந்திர யுத்தம் ஒன்றைச் சர்வதேச அளவில் அரசு ஆரம்பித்திருக்கிறது. இதற்காக பல இராஜதந்திரிகளை அரசு களம் இறக்கியுள்ளது.

எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் தீவிரமான முனைப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்காக தீவிரமான இராஜதந்திர முனைப்புக்களை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் ஒரு கட்டமாக இலங்கை இராணுவத்தினால் 8 காணொளிகள் தயாரிக்கப்பட்டு அவை, மனித உரிமைகள் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த காணொளிகளில் போருக்குப் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் பணிகள் காட்டப்பட்டுள்ளதாக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர வெளியுறவு அமைச்சு ஒழுங்கு முறையில் வெளிநாட்டு தூதரங்களுக்கு விளங்கங்களை வழங்கி வருகிறது.

இதற்கிடையில் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்கப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளமையால் அது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.

# தேர்தல் களத்தில் ஹிருணிகா நிச்சயம்



(கொழும்பு)

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மகள், ஹிருணிகா பிரேமசந்திர தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட திட்டமிட்டுள்ளார். ஜனாதிபதி நாடு திரும்பியதன் பின்னர் ஹிருணிகாவும் அவரது தாயாரும் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

மத்திய மாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட ஹிருணிகா திட்டமிட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி ஹிருணிகாவின் தந்தையான பாரத லக்ஸமன் பிரேமச்சந்திர கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

வழக்கு விசாரணைகளின் பின்னர் ஹிருணிகா தேர்தலில் போட்டியிடுவது குறித்து அறிவிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

# அலுகோசு பதவிக்கு மீண்டும் வெற்றிடம்.

(கொழும்பு)

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் மீண்டும் அலுகோசு பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த பதவிக்காக ஏற்கனவே இணைத்துக்கொள்ளப்பட்ட இருவரும் சுகயீனத்தால் பதவி விலகியுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மீண்டும் அலுகோசு பதவிகளுக்காக தகுதியான வர்களை சேர்த்துக்கொள்ள சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கான விண்ணப்பம் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

# மாநாட்டுக்காக இறக்கிய வாகனங்கள் அரசுக்கு இப்போது தலைவலி

## ஜே.வி.பி. போர்க்கொடி



(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டிற்காக தருவிக்கப்பட்ட வாகனங்களை மீள அரிக்குமாறு ஜேவிபி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

மாநாட்டிற்காக 54 பென்ஸ் ரக கார்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததாக ஜே.வி.பி பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சினால் இந்த வாகனங்கள் தருவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வரி விலக்குடன் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களுக்கு நிதி அமைச்சே பொறுப்பு என சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாகன இறக்குமதிக்காக 750 மல்லியன் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தை இறக்குமதி செய்த நிறுவனங்கள் வரியைச் சேர்த்து வாகனங்களை விற்பனை செய்யக்கூடும்.

வெளிப்படையான முறையில் இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலம், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# குடிசை வீடுகளுக்கு மூடுவிழா 65 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணம்

## கொழும்பில் புதிய திட்டம்

(கொழும்பு)

கொழும்பு நகர அபிவிருத்தியூடாக கொழும்பில் 65 ஆயிரம் குடிசை வாழ் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்காக நிர்மாணிப்பதற்காக 200 ஏக்கர் காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மக்கள் வேறு எந்த இடத்திற்கும் வெளியில் அனுப்புவதற்கு நாம் ஒரு போதும் விடமாட்டோம், இடமளிக்கமாட்டோம் என்று உறுதியளிக்கின்றேன். இந்த மக்களுக்கு அநியாயம் ஏற்பட அனுமதிக்கமாட்டோம் என்றும் கூறினார்.

வரவு - செலவுத் திட்டத்தில் தாணி, காணி அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான நாடாளுமன்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு, கிழக்கு காணிப்பிரச்சினைகள் தொடர்பாக கடந்த காலங்களில் 148, 408 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவற்றில் தற்போது 22,408 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள முறைப்பாடுகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கில் காணப்படும் காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க அரசாங்கம் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது காணிப் பிரச்சினைகளை



தீர்க்க அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களின் ஊடாக அடுத்த வருடத்தில் வடக்கு, கிழக்கின் 75 வீதமான பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமெனவும் அவர் குறிப்

# புரிந்துணர்வு உடன்படிக்கை கென்யாவுக்கும் இலங்கைக்கும்

## வலுவடையும் உறவு

(கொழும்பு)

கென்யாவுக்கும் இலங்கைக்கும் இடையே 8 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தலைநகர் நைரோபியில் இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு தரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த உடன்படிக்கைகளின் நோக்கமாகும்.

உடன்படிக்க்கை கைச்சாத்திடும் நிகழ்வில் இலங்கை மற்றும் கென்யா ஆகிய 2 நாடுகளினதும் தலைவர்கள் கலந்து கொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பௌத்த பிக்குகளுக்கு மவுசு குறைகிறதா

## சீறுகிறது பொதுபலசேனா

(கொழும்பு)

பௌத்த பிக்குகளை விடவும் கத்தோலிக்க மதகுருமாருக்கு மதிப்பளிக்கப்படுவதாக பொது பலசேனா குற்றம் சுமத்தியுள்ளது.

ஆளும் கட்சி அரசியல்வாதிகள் உள்ளிட்ட நாட்டின் அரசியல்வாதிகள் பௌத்த பிக்குகளின் ஆலோசனைகளை விடவும், கர்தினால்களுக்கு மரியாதை அளிப்பதாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 33 அதி முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த பிக்குள் இருப்பதாகவும், அவர்களை விடவும் கார்தினாலுக்கு அரசியல்வாதிகள் மதிப்பளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எந்தக் கார்தினாலுக்கு அரசியல்வாதிகள் மதிப்பளிக்கின்றார்கள் என்பது பற்றிய தகவலை அவர் நேரடியாக வெளியிடவில்லை.

எனினும், இலங்கையில் தற்போது கார்தினலாக சேவையாற்றி வரும் ஒரே கத்தோலிக்க மதத் தலைவர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை என்பது குறிப்பிடத்தக்கது.

# இனங்களுக்கிடையிலான விரிசலுக்கு இலங்கை - இந்திய் ஒப்பந்தமே காரணம்

## கூறுகிறார் வெளிவிவகார பிரதி அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை - இந்தியாவிற்கு இடையே 1987 இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே இனங்களுக்கிடையிலான விரிசலுக்கு காரணமாக அமைந்தது என வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விஜித பேருகொட எம்.பி. கேட்ட வாய் மொழி மூலமான விடைக்கான கேள்விக்கு பதிலளித்துப் பேசும்போதே வெளிவிவகார பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 1987 இல் ஆட்சியிலிருந்த அரசு ஒழுங்கான வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடிக்காத நிலையிலேயே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்து இடம்பெற்றுள்ளது.

எனினும் ராஜீவ் காந்திக்கும் ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் இடையே கைச்சாத்தான அந்த ஒப்பந்தம் இன்றும் செல்லுபடியாகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளும் பாதிக்கப்பட்டது மட்டுமல்ல இந்திய இராணுவம் இலங்கைக்குள் வருவதற்கும் வழிவகுத்தது. அத்துடன் இந்திய இராணுவத்தினர் அதிகளவில் கொல்லப்பட்டதும் இலங்கையிலேயே என அமைச்சர் பதிலளித்தார்.

மேலும், திருகோணமலையிலுள்ள எண்ணெய்க்குதங்களைக்கூட இந்தியாவுக்கு கொடுப்பதற்குக் கூட இந்த ஒப்பந்தம் வழிகோலியது.

இருப்பினும் எண்ணெய்க்குதங்கள் கையளிப்புக்காக ஒப்பந்தம் கைச்சாத்திட்ட விதத்திலும் தவறு இருக்கிறது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எல்லா இனங்களுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்பட்டன.

என்றாலும் அந்த ஒப்பந்தம் இன்றும் செல்லுபடியாகும் என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் நியோமால் பெரேரா மேலும் குறிப்பிட்டார்.

# தொழில்முயற்சியாளர்கள் வாய்ப்பை சரியாக பயன்படுத்த வேண்டும்

## மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.குறிஞ்சிதரன்

(யாழ்ப்பாணம்)

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களூடாகவே நாட்டினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்ல முடியும். இதனை கருத்திற் கொண்டே அரசு பாதீட்டில் இந்தத் துறைக்கு அதி களவு நிதி ஊட்டல்களை வழங்கி உள்ளது. அரசு மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் கவனமும் இவர்களை நோக்கியே உள்ளது.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்த தொழில் முயற்சியாளர்கள் முன்வர வேண்டும் என மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.குறிஞ்சிதரன் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற மக்கள் வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் மற்றும் ஆலோசனை வழங்கல்கள் நிலையத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரச கடன்கள் மத்திய வங்கியின் கடன்கள் வங்கிகளின் கடன்கள் என பலவகையான கடன் வசதிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வங்கிகளில் கடன் பெற்று தொழில் தொடங்கிய பலர் தொழிலில் நஷ்டமடைந்து தோல்வி அடைந்தமைக்கான காரணம் பற்றி ஆராய்ந்த போது சரியான நிதி நிபுணத்துவம் இல்லாமையே காரணமாக காணப்பட்டது. சரியான நிதி முகாமைத்துவத்துடன் தொழிலைத் தொடங்கினால் அது இலாபகரமானதாக அமையும் என்றார். (54)

# திருவாதிரை உற்சவம்

(யாழ்.நிருபர்)

ஈழத்துச்சிதம்பரம் காரைநகர் சிவன் கோவிலில் கடந்த திங்கட்கிழமை திருவாதிரை உற்சவம் ஆரம்பமாகி திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் நாளை செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் அன்று இரவு நடேசர் அபிஷேகமும் மறுநாள் அதிகாலை ஆருத்ரா தரிசன மும் இடம்பெறும்.

நாளை மறுதினம் புதன்கிழமை மாலை திருவூடலும், தீர்த்தோற்சவமும் இடம்பெறும். திருவிழாக்காலங்களில் பத்துநாட்களும் மாணிக்கவாசகர் மடாலயத்தினர் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கிவருகின்றனர். ஆலயம் வரை நேரடி பேருந்து சேவைகள் இடம்பெறுகின்றன. கடந்த சில தினங்களாக உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் பெருமளவில் ஆலயத்திற்கு வருகை தந்தவண்ணமுள்ளனர். தேர்த்திருவிழாவிற்குப் பெருந்தொகையான அடியார்கள் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (10)

# வெங்காயச் செய்கைக்கு தயாராகும் விவசாயிகள்

அச்சுவேலி பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் தற்போது விவசாயிகள் வெங்காயப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

தமது வீட்டுப் பகுதியில் சேகரித்து வைத்திருந்த பசளை வகைகளை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்று தமது செய்கை நிலங்களில் போட்டு நிலத்தைப் பண்படுத்தி வருவதையும் காணமுடிகின்றது.

மேலும் சிலர் கிருமிநாசினிகளை விசிறியும் மற்றும் தமது தோட்ட நிலங்களில் காணப்பட்ட களைகளையும் அகற்றி வருவதனையும் காணமுடிகின்றது.

அத்துடன் இப்பகுதிகளில் கடந்த வருடங்களை விட இந்த வருடத்தில் குறைந்தளவான நிலப்பரப்பிலேயே வெங்காயச் செய்கை மேற்கொள்ளவிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. (85)


# மாகாணக் கல்வித்திணைக்களத்தால் ஆசிரியருக்கான சேவைமுன்பயிற்சி

(மானிப்பாய்)

புதிதாக நியமனம்பெற்ற உடற்கல்வி, தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப டிப்ளோமா ஆசிரியர்களுக்கான ஆசிரிய சேவை முன்பயிற்சி கடந்த 8ஆம் திகதி முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி வரை இப்பயிற்சி நடைபெறும். 2013ஆம் ஆண்டு புதிதாக நியமனம்பெற்ற உடற்கல்வி, தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாதாரி ஆசிரியர்களுக்கான 14 நாட்கள் வதிவிட இவ் ஆசிரியசேவை முன்பயிற்சி வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

இதில் 120 உடற்கல்வி ஆசிரியர்களும், 40 தகவல்தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயிற்சியை பெற்று வருகின்றனர். கற்றல், கற்பித்தல் முறையியல், பாடத்திட்டம் தயாரித்தல், கல்விக்கொள்கைகள், விளையாட்டு, தகவல் தொழில்நுட்ப அறிவு, அழகியற்செயற்பாடுகள், ஆன்மீகம் தியானம், கல்வி உளவியல், ஆசிரியர் சுயவிபரக்கோவை,



ஆசிரியர் தரங்கணிப்பு, பாடசாலைகளின் கணக்கு நடைமுறைகள், தரஉள்ளீட்டு நிதி விடயங் கள். போன்ற விடயங்கள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

14 நாட்களும் முழுமையாகப் பயிற்சியைப் பூர்த்திசெய்யும் அனைவருக்கும் மாகாணக்கல்வித்திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# அமெரிக்கன் சிலோன்மிஷனின் கலையரங்கத்திறப்பு விழா

(திருநெல்வேலி)

நுணாவில் அமெரிக்கன் சிலோன் மிஷன் அமைப்பினால் புதிதாகக் கட்டப்பட்ட கலையரங்கம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

திருச்சபை வளாகத்தில் திறந்து வைக்கப்படவுள்ள இக் கலையரங்கத்திறப்பு விழாவுக்கு வண பிதா பீ.தேவராசா தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மிஷன் தலைவர் வண ஈனோக் புனிதராஜா, சாவகச்சேரி பிரதேச சபைத், தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஜே/308 பிரிவு கிராம உத்தியோகத்தர் செல்வி தயானந்தி தங்கராஜா, வண பிதா பீ.தேவதாஸ், வண வீ.ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

28ஆம் திகதி சனிக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷனினால் கிறிஸ்மஸ் இறைசெய்தி மற்றும் புதுவருட ஆராதனை ஆகியன மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஒளிவிழா நிகழ்வுகள் இசை நிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அளவெட்டி மிஷனின் பங்கு மக்கள் கைதடி முதியோர் இல்லத்தில் ஒளிவிழா நடாத்தவுள்ளனர். முதியோர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படவுள்ளது. அளவெட்டி திருச்சபையைச் சேர்ந்த வண வீ.ராஜ்குமார் இதில் கலந்து கொள்வார். (137)

# தருமபுரம் கிராமத்திற்கு தனியாரின் மின்விநியோகம்

(தருமபுரம்)

மின்சார சபையினரால் மின் விநியோகிக்கப்படாத தருமபுரம் பகுதிகளுக்கு தனியாரினால் மின் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பல காரணங்களைக் காட்டிதருமபுரத்தின் பல பகுதிகளுக்கு இலங்கை மின்சாரசபை மின் விநியோகிக்கவில்லை. இதனால் இப்பகுதிகளில் வசிப்பவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றமையால் இதை சந்தர்ப்பமாக வைத்து தனியாரினால் ஜெனரேற்றர் மூலம் வீடுகளுக்கு மின் விநியோகிக்கப்படுகின்றது.

மின்சேமிப்பு மின் குமிழ்கள் மட்டுமே இவ்வாறு ஒளிர்வதற்கு மின்விநியோகிக்கப்படுகின்றது.

மாலை 6.30 மணிமுதல் இரவு 10.30 மணிவரை இம் மின் விநியோகம் இடம் பெறுகின்றது. ஒரு மின் குமிழுக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபா வரையில் அறவிடப்படுகின்றதாக இம் மின்சாரத்தைப் பெறுவோர் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையினரின் அசமந்தப் போக்கினால் தாம் மிகவும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கவலை தெரிவித்தனர். (இ)

## இரதோற்சவம்

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாலய மகோற்சவம் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் இன்று பகல் நாகவாகனத் திருவிழாவும், இரவு கைலாசவாகனமும், நாளை பகல் மகர வாகனத்திருவிழாவும் இரவு சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

மேலும் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை திருவூஞ்சல் உற்சவமும் இடம்பெறவுள்ளது. (இ)

## முரசின் இன்றைய பலன்



(16.12.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 01 ஆம் திகதி.
ரோகினி நட்சத்திரம் மு.இ. 11.13 வரை.
பின் மிருகசீரிடம். சதுர்த்தி/அமிர்தம்.
இராகுகாலம் 07.52 - 09.22 வரை. சுபநேரம் 12.22 - 01.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** 
ஏற்கனவே செய்த உதவிகளுக்கு பாராட்டுக் கிடைக்கும், வியாபார வளர்ச்சிக்கான ஆலோசனை பெற அனுபவசாலிகளைச் சந்திக்க முயலவ்.

**ரிஷபம்** 
குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்பட்டு மகிழ்விளைத் தக்க வைக்கும், உதவி செய்தவர்கள் பாராமுகமாக இருப்பதைக் கண்டு கவலை கொள்ளல்.

**மிதுனம்** 
அவதூறு சொல்பவர்களைக் கண்டு நெஞ்சம் விம்முதல், உதவப்போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளலாம்.

**கடகம்** 
கடனில் ஒருபகுதியைச் செலுத்தியமையினால் நிம்மதி, தாயாரின் தேகநலம் மேம்படுவதைக் கண்டு மகிழ்வுறல்.

**சிம்மம்** 
தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த எதிரி சரணாகதி அடைதல், தடைப்பட்டிருந்த பதவி உயர்வு கிடைத்ததால் மன மகிழ்வு.

**கன்னி** 
கடந்த கால நல்ல சம்பவங்களை ஞாபகப்படுத்தி மகிழ்தல், ஆடம்பரச் செலவுகளை இயன்றவரை தவிர்க்க எண்ணமிடல்.

**துலாம்** 
ஈடுபட்ட துறையில் பரிசில்/பாராட்டு/கௌரவம் பெறல், குடும்பத்தில் நிலவிய மனக்கசப்பு அற்றுப் போதல்.

**விருச்சிகம்** 
தாயார் வழி உறவினர் கை தூக்கி விடுவதால் உயர்வு ஏற்படல், அதிரடியாகச் செயற்பட்டு பிறரை வியக்க வைத்தல்.

**தனுசு** 
உடன் பிறந்தோரின் பாராமுகம் கண்டு கவலையினால் துவண்டுவிடல், நேர்முகப்பரீட்சையில் சமூகமளித்ததால் கிடைக்கும் நம்பிக்கை பிறத்தல்.

**மகரம்** 
இழுபட்டுக் கொண்டிருந்த காரியம் இனிதே முடிவடைதல், தம்பதியரிடையே நிலவிய கருத்து மோதல் தீர்ந்துவிடல்.

**கும்பம்** 
விட்டுக்கொடுத்துப் போவதனால் பிரச்சினை சுலபமாகத்தீரல். புதிய பொறுப்புக்களை ஏற்று மகிழ்வுடன் பணிபுரிய ஆயத்தமாதல்.

**மீனம்** 
இடமாற்றம் பற்றிய விண்ணப்பம் சாதகமான பதிலைத்தராமையினால் கவலை, அயலவரின் தான் தோன்றித்தனமான செய்கையினால் எரிச்சலடைதல்.

# மீண்டும் இங்கிலாந்து சொதப்பல்

## வோர்னர் அதிரடிச் சதம்; ஓட்டங்களைக் குவிக்கிறது ஆஸி.



(பேர்த்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான பேர்த் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தில்சொதப்பியுள்ளது. அதேவேளை, வழமை போன்று அவுஸ்ரேலிய அணியின் ஆதிக்கம் தொடர்ந்தவண்ணமுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி தொடர்ந்தது. அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சிற்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து வீரர்கள் மண்டியிட்டு மடிந்தனர். குறிப்பாக, ஹரிஸ், பீற்றர் சிடில் ஆகியோரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் இங்கிலாந்து வீரர்கள் விக்கெட்டைத் தாரைவார்த்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குக் 72, கார்பெறி 45, ரிம் பிரெஸ்ணன் 21, கெவின் பீற்றர்சன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ், பீற்றர் சிடில் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

134 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய. அணி டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்டங்களை விரைவாகக் குவித்து வருகின்றது. இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டேவிட் வோர்னர் 112 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் வோர்னர் பெற்ற ஐந்தாவது சதமாக இது அமைந்தது. மற்றும் வட்சன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் ஸ்வான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 369 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் நான்காம்நாளாகும். அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 385.



அவுஸ்ரேலியா இங்கிலாந்து அணிகளிடையே பேர்த் மைதானத்தில் நடைபெற்று வரும் 3ஆவது டெஸ்ட் போட்டியின்போது ஆஸி. அணி முன்னாள் நட்சத்திரம் ஆடம் கில்கிறிஸ்டிற்கு ஐ.சி.சி. பிரபலம் அந்தஸ்து வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அவர் மனைவி மற்றும் குழந்தைகளுடன் உற்சாகமாக பங்கேற்றார்.



## கைநழுவிய விருது

நான்கு முறை சிறந்த உலகக் கால்பந்து வீரர் என்ற பட்டத்தைப் பெற்ற பெருமை ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த பார்சிலோனா கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சிக்கு உண்டு. இருப்பினும் இந்த ஆண்டின் சிறந்த ஆர்ஜென்ரீனா விளையாட்டு வீரர் என்ற பட்டம் அவரையும் தாண்டி அந்நாட்டின் ரென்னிஸ் வீரரான ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோவிற்குக் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டில் நான்கு பட்டங்களை வென்ற டெல் போட்ரோ, இண்டியன் வெல்ஸ் மற்றும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பிடித்தார். விம்பிள்டனில் அரையிறுதிப் போட்டி வரை வந்த போட்ரோ, ஜோகோவிக்கிடம் போராடித் தோற்றார். 4 மணி மற்றும் 43 நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்த ஐந்து செட் போட்டியே விம்பிள்டன் ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் மிக நீண்டது என்ற பெருமையையும் பெற்றது.

2009 ஆம் ஆண்டின் அமெரிக்க ஓப்பன் சம்பியனும், உலக தரவரிசையில் ஐந்தாம் நிலையில் இருப்பவருமான டெல் போட்ரோவை, ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற விளையாட்டு விழாவில். இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராக அறிவித்தனர். . இது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத் திய போட்ரோ, இந்த ஆண்டு தான் எதிர்பார்த்ததை விடவும் மிகவும் சிறப்பாக இருந்ததாகத் தெரிவிக்கின்றார். அடுத்த சீசனைத் தான் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாகவும் அவர் தனது இணையத் தளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

# உலகக் கிண்ணத்தில் அசத்துவார் நெய்மர்



ஐரோப்பிய கழகப் போட்டிகளில் அசத்துகிறார் நெய்மர். இந்த அனுபவத்தை பயன்படுத்தி, உலக கோப்பை தொடரில் இவர் சாதிக்கலாம் என கால்பந்து ஜாம்பவான் பீலே நம்பிக்கை தெரிவித்தார்.

பிரேசில் அணியின் நட்சத்திர கால்பந்து வீரர் நெய்மர், கொன்பெடரேஷன் கோப்பையை வெல்ல உதவினார்.

மெஸ்சி உள்ளிட்ட அசத்தல் வீரர்களை கொண்ட ஐரோப்பாவின் பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார்.

தவிர, அடுத்த ஆண்டு சொந்த மண்ணில் நடைபெறவுள்ள உலக கோப்பை (ஜுன் 12-ஜுலை 13) தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த நெய்மர், பார்சிலோனா அணியில் பங்கேற்பது நீண்ட நாள் கனவு. இதில் இடம் கிடைத்தது மகிழ்ச்சி. இங்கு அதிகம் கற்றுக் கொள்ளலாம். எதிர்வரும் உலக கோப்பை தொடரில் சிறப்பாக செயற்படுவேன் என்றார்.

இதேவேளை, நெய்மர் குறித்து பிரேசில் கால்பந்து மன்னன் பீலே குறிப்பிடுகையில், ஐரோப்பிய கால்பந்து கிளப் போட்டிகளில் முத்திரை பதித்துள்ளார் நெய்மர்.

இந்த அனுபவம் உலக கோப்பை தொடரில் இவருக்கு கைகொடுக்கலாம். இவர், சொந்த மண்ணில் அசத்தும் பட்சத்தில் பிரேசில் அணி மீண்டும் ஒரு முறை உலக சம்பியன் பட்டம் வெல்லலாம் என்றார்.

## இந்தியா சம்பியன்



(லூதியானா)

ஆண்களுக்கான உலக கோப்பை கபடி தொடரின் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இதன் மூலம் தொடர்ந்து நான்காவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய சிறப்பை இந்திய அணி பெற்றுக்கொண்டுள்ளது.

இந்தியாவில், ஆண்களுக்கான 4ஆவது உலக கோப்பை கபடி தொடர் நடைபெற்றது. இதில் இந்தியா, ஸ்பெயின் உள்ளிட்ட 11 அணிகள் பங்கேற்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் எதிரிகளான இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 49-38 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடர்ந்து 4ஆவது முறையாக (2010-13) சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியது. கோப்பை வென்ற இந்திய அணிக்கு, சம்பியன் பட்டத்துடன், 2 கோடி பரிசாக வழங்கப்பட்டது. பாகிஸ்தான் அணி மூன்றாவது முறையாக (2010, 12, 13) இரண்டாவது இடம் பிடித்தது. இரண்டாவது இடம் பிடித்த பாகிஸ்தான் அணிக்கு ஒரு கோடி பரிசு வழங்கப்பட்டது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில், இங்கிலாந்தை வீழ்த்திய அமெரிக்க அணியினருக்கு பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# புல்தரையில் களைத்துவிட்ட ராணி வெள்ளித்திரையில் தோன்றுகிறார்?



வசீகரமான கண்கள், 6 அடிக்கும் மேலான உயரம் என அசரடிக்கும் அழகு வாய்ந்த ரென்னிஸ் நட்சத்திரம் இவானோவிச்சிற்கு இரசிகர்கள் பட்டாளம் அதிகம். புல்தரை களத்தில் விளையாடி களைத்துவிட்டதோ என்னவோ, தற்போது வெள்ளித்திரையில் தோன்றும் எண்ணத்தில் உள்ளாராம்.

சேர்பியாவைச் சேர்ந்தவர் இவானோவிச், (வயது-26). முன்னாள் முதல் வீராங்கனையான இவர், தற்போது 16ஆவது இடத்தில் உள்ளார். கிராண்ட்ஸ்லாம் தொடரை பொறுத்தவரை பிரெஞ்ச் ஓப்பனில் (2008) பட்டம் வென்றார். இதனுடன் சேர்த்து இதுவரை மொத்தம் 11 தொடரை கைப்பற்றியுள்ளார். தற்போது இவருக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது.

இது குறித்து இவர் கூறுகையில், எனக்கு பாடத் தெரியாது. இதனால், பாடகியாகமாட்டேன். சின்னச் சின்ன கதாபாத்திரத்தில் நடிக்க பல முறை வாய்ப்பு வந்தது. இருப்பினும் மறுத்துவிட்டேன். அதேநேரம், போட்டியிலிருந்து ஓய்வு பெற்றபின், சினிமா வாய்ப்பு வந்தால், என்ன நடக்கும் எனத் தெரியாது. தற்போது, என். கவனம் முழுவதும் ரென்னிசில் மட்டும்தான் உள்ளது.

தொடர் இல்லாத நேரத்தில், ஷொப்பிங் சென்று நேரத்தை வீணடிக்கமாட்டேன். ரிலாக்சாக விடுதியில் ஓய்வு எடுப்பேன். தவிர, எனக்குப்பிடித்த புத்தகத்தை படிப்பேன். விருப்பமான திரைப்படத்தை பார்ப்பேன். அடுத்து வரும் போட்டிக்காக பயிற்சியில் ஈடுபடுவேன் என்றார்.

# அரையிறுதியில் அண்ணா, வளர்மதி

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத்தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு வட்டுக்கோட்டை அண்ணா பி, வளர்மதி அணிகள் முன்னேறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை நடாத்தி வருகின்றது.இப்போட்டித் தொடரின் இரு காலிறுதி ஆட்டங்கள் கடந்த 13ஆம் திகதி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை அண்ணா அணியும், வட்டுக்கோட்டை பாரதி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக போட்டி நிறைவடையும் வேளை இரு அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அண்ணா அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை திருமகள் அணியும், வளர்மதி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வளர்மதி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

## அச்சம் வேண்டாம் வீரர்களே! துள்ளி விளையாடுங்கள்

# உறுதுணை அளிக்கிறது போதனாசாலை விளையாட்டு மருத்துவ அலகு புதிய சேவை




(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் விளையாட்டு மருத்துவ அலகு இயங்கி வருகின்றது.

விளையாட்டு வீரர்கள் உடற்தகுதி, போட்டிகளின் போது காயமடைந்தல் போன்ற பல பிரச்சினைகளை கடந்த காலங்களில் எதிர்கொண்டு வந்துள்ளன.

இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் யாழ். போதனா வைத்தியசாலையில் விளையாட்டு மருத்துவ அலகு கடந்த ஆறு மாதங்களாக இயங்கி வருகின்றது. விளையாட்டு வீரர்கள் இந்த அலகுடன் தொடர்பு கொண்டு உடற்தகுதி உட்பட ஏனைய அனைத்து ஆலோசனைகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கால்பந்து, மரதன் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவிரும்புவோர், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டால் போட்டி நடைபெறும் களத்தில் மருத்துவர் ஒருவரின் செயற்பாட்டு மையம் ஒன்று இயங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மைலோ கிண்ணக் கால்பந்துப் போட்டியின் போது விளையாட்டு மருத்துவ அலகு இயங்கியதையும், அதற்குப் பொறுப்பாக வைத்தியர் எஸ். அறிவுச்செல்வன் செயற்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மைலோ கிண்ண கால்பந்து 3ஆம் இடம் விண்மீன்

(யாழ்ப்பாணம்)

மைலோ வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத்தொடரில் மூன்றாமிடத்தைபொலிகண்டி விண்மீன் அணி பிடித்துக் கொண்டது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகப் பிரிவினரால் முதன் முறையாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை லீக் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்திற்கான போட்டி நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.




இதில் பொலிகண்டி விண்மீன் அணியும், ஊரெழு றோயல் அணியும் மோதின. குருநகர் பாடுமீன் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த விண்மீன் அணி ஊரெழு றோயல் அணிக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்குமா என்ற முணுமுணுப்பு மைதானத்தில் குழுமியிருந்த இரசிகர்கள் மத்தியில் நிலவியது. இறுதிப் போட்டிக்கு தெரிவாகாத வெறுப்பு ஊரெழு றோயல் அணி வீரர்களின் முகத்தில் களைப்பு பளிச்சிடத் தெரிந்தது. ஆட்டம் தொடங்கியது. வென்றால் பேசப்படும் என்ற உத்வேகத்துடன் விண்மீன் அணி களத்தில் சிங்கம் போன்று சீறியெழுந்தது. சிங்கங்களுக்கே சோதனையா? சினக்காமல் நிதானமாக ஆடியது றோயல் அணி. இருப்பினும் றோயல் அணிக்கு சினப்பூட்டும் வகையில் முற்பாதி ஆட்டத்தின் விண்மீன் அணி முதல் கோல் அடித்து அசத்தியது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் றோயல் அணி செயற்பட்டது. ஆனால், விண்மீன் அணியின் பிற்கள அரண், கோல் காப்பாளரின் திறன் அதற்கு பெரும் தடையாக இருந்தது. இதன் பின் வேகமாகச் செயற்பட்ட விண்மீன் அணி முற்பாதி ஆட்டம் நிறைவடையும் வேளை மேலுமொரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இந்நிலையில் 2-0 என்ற கணக்கில் விண்மீன் முன்னிலை பெற்ற வேளை முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்திலும் ஆதிக்கம் செலுத்திய விண்மீன் அணி அதிரடியாக இரு கோல்களைப் போட்டு அசத்தியது. அணியின் கௌரவத்தை காப்பாற்றும் முனைப்பில் ஒரு கோலையாவது அடித்துக் கொள்ள வேண்டும் என்ற றோயல் அணியின் முயற்சிகள் யாவும் விண்மீன் கோல் காப்பாளரின் துல்லியமான செயற்பாட்டினால் முறியடிக்கப்பட்டது.

இறுதியில் பொலிகண்டி விண்மீன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. வளர்ந்துவரும் இளம் வீரர்களைக் கொண்ட விண்மீன் அணிக்கு விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் பலரால் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டதுடன் அதன் விரைவான வளர்ச்சி குறித்து பெருமிதமும் கொண்டனர். இப்போட்டியின் தொடரின் சிறந்த கோல் காப்பாளர் விருதை விண்மீன் அணி வீரர் டினேஸ் பெற்றுக் கொண்டமை விசேட அம்சம். (எஸ்.பி.93,48)

## அன்ரனீஸ் கல்லூரி வீரருக்கு

# கறுப்புப் பட்டி




(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரியின் கராத்தே வீரர் எம்.சுகிர்தன் கறுப்புப் பட்டிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார். சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா கழக பிரதம ஆசிரியரும், கராத்தே ஒ.்.வ் ஜப்பான் பெடரேசன் ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதியுமான் சென்செய்.அன்ரோ டினேஸினால் இவருக்கான முதலாம் கறுப்புப்பட்டிக்கான தர்முயர்வு வழங்கப்பட்டது.

கராத்தே விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்ட எம். சுகிர்தன், 2011 ஆம் ஆண்டு முதல் மாவட்ட மற்றும் மாகாண மட்டப் போட்டிகளிலும் தேசிய கராத்தே . சம்மேளனம் மற்றும் கல்வி திணைக்களம் ஆகியன நடாத்திய போட்டிகளிலும் பதக்கங்களை வென்று தேசிய போட்டிகளில் பங்கெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுகிர்தனுக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கின்றது. அவருடைய செயற்பாடுகள் வேகமாகவும், விவேகமாகவும் இருப்பது ஆச்சரியம் என அவரின் பயிற்றுவிப்பாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மைலோ கால்பந்துத் தொடரில் இரண்டாமிடத்தை பிடித்துக் கொண்ட பாசையூர் சென். அன்ரனீஸ் அணிக்கு கிண்ணம் வழங்கப்படுவதைக் காணலாம். இப்போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# யாழ்ப்பாணத்து கால்பந்து சமர் விரைவில் ஏனைய ஆட்டங்கள்


(யாழ்ப்பாணம்)

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணத்து கால்பந்துச் சமரின் ஏனைய போட்டிகள் விரைவில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

60இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டி விலகல் முறையில் நடைபெற்றது. முதல் சுற்று ஆட்டங்களிலிருந்து எட்டு அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. இதில் மயிலங்காடு ஞானமுருகன், வல்வெட்டித்துறை வல்லை, இளவாலை யங்ஹென்றிஸ், நாவாந்துறை சென். நீக்கலஸ், மானிப்பாள் றெட்றோஞ்சர்ஸ் நாவாந்துறை சென். மேரிஸ், ஊரெழு றோயல், குருநகர் பாடுமீன் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இவ்வணிகளுக்கான லீக் போட்டிகள் தற்போது நடைபெற்று வந்ததாகவும், ஏனைய கழகங்களின் போட்டி அட்டவணைக்கு ஏற்ப இப்போட்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், விரைவில் போட்டி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இப்போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# ஆடு பார்க்கலாம் ஆடு!




தமிழ் இலக்கியத்திலே பரவலாகப் பேசப்பட்ட எழுது பொருள் என்றால் ஆட்டைத் தான் சொல்ல வேண்டும்.

கி.ராஜநாராயணன் எழுதிய கிடை குறுநாவலைக் குறிப் பிட்டு சொல்லவேண்டும். ஆடு களைப் பற்றியும் அவற்றின் வளர்ப்பு முறைகளைப் பற்றியும் பிரத்தியேகமாக கவனித்து கூர்மையான விவரிப்புகளுடன் சொல்லப்பட்ட கதை. நாய் களைப் போல் ஆடுகளிலும் சாதி இருக்கிறது. அவற்றுக்கி டையே கலப்பு என்பது எப்போது நிகழும்? இனக்கலப்பு நிகழ்ந்தால் ஆண்டை இனம் அதை ஒத்துக் கொள்ளுமா? எங்கே மேய வேண்டும் என்று அறிவுறுத்தப்படும் ஆட்டிற்கு சுதந்திரம் எப்படி சாத்தியமாகும் போன்றவற்றை அடக்குமுறை ஜாதிகளுக்கு குறியீடாக வைத்து எழுதப்பட்ட நாவல்.

கி.ரா.வின் கிடை நாவலை அம்ஷன் குமார் "ஒருத்தி" திரைப்படமாக எடுத்தார். ஆடு மேய்ப்பவள் மேல்சாதி நாயக்கருடன் சேர்ந்து இருந்துவிடுவாள். விளைச்சல் நிலத்தை ஆடுகள் மேய்ந்துவிடும். இது தமிழ் சினிமாவின் தேய்வழக்காக பாலச்சந்தர் படங்களில் இருக்கும். இந்தக் கதையில் இது முக்கியமான தொடர்பைக் கொடுக்கின்றன. ஆடு போல் எதற்கெடுத்தாலும் மேய்ப்பன் சொல்வதை தலையாட்டுபவன் எல்லப்பன். தமக்கு விதிக்கப் பட்ட கண்காணிப்பை மீறுபவள் செவனி. ஆடுக-ளால் பயிர் அழிகிறது. கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக இருந்தால் பெருக்கம். அதுவே, சாதி தாண்டி இணைந்தால் அழிவா-கப் போகிறது.

தென்மேற்குப் பருவக்காற்று திரைப்படத்தில் ஆட்டுக்கிடாய் களுக்கு இடையே சண்டைக் காட்சி வைத்திருந்தார்கள். பின்னிரவுகளில் அடுத்த ஊருக்குப் போய் ஆடுகளைத் திருடுவதுதான் நாயகியின் குடும்பத்தொழில்.

மிஷ்கினின் ஓநாயும் ஆட்டுக் குட்டியும் படம் கூட ஆட்டை உயர்வாகச் சொல்வதுதான்.

ஜோசியத்திலும் ஆட்டிற்கு தனி இடம் இருக்கிறது. சீன உணவகங்களுக்குச் சென்றால் அங்கே பன்னிரெண்டு மிருகங்களைப் போட்டிருப் பார்கள். கூடவே சுவையான குணநலன்களும் கொடுப்பார் கள். சீனர்களின் அடுத்த வருடம் ஆடு வருடம். இந்த வருடத்தில் பிறந்தவர்கள் இளகிய மனம் கொண்டிருப்பார்களாம். கூச்ச சுபாவம் கொண்டவர்கள், சிறந்த படைப்பாளிகளாகவும் இருப்பார்கள் என்பது சீன சோதிடத்தின் ஆருடங்கள்.

தமிழில் மேஷ இராசி என்போம். லிண்டா குட்மேன் என்பவர் Aries இராசிக் காரர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களுக்கு யார் பொருத்தம் என்று புத்தகம் எழுதியிருக்கிறார்.

ஆடு மேய்க்கும் சிறுவர் களை வைத்து பெருமாள் முருகன் எழுதிய "கூளமாதாரி" குறிப்பிடத்தக்க நாவல். அந்தச் சிறுவயதிலேயே சாதி ஏற்றத்தாழ்வுகள் எப்படித் தோன்றுகிறது என்பது பற்றிய நாவல். இவரின் எழுத்துக்கள் மெதுவாகத்தான் நம்மை ஆக்கிரமிக்கும். முதல் இரண்டு அத்தியாயங்களில் ஆற அமர கதாபாத்திரங்களை அறிமுகம் செய்விப்பார். கதைச்சூழலும் அந்த இடத்திற்கான வருணனை களிலும் ஆழ்ந்து சென்றபின் சம்பவங்கள் தீவிரமாக நிதர்சன மாக யதார்த்தத்தை முன்னிறுத் தும். இதில் கவுண்டர் வீடுகளில் கிட்டத்தட்ட கொத்தடிமைகளாக உழலும் சக்கிலியர்களின் நிலை-யை கூளையன், நெடும்பம், வவுரி, செவுடி, மொண்டி என்னும் இவர்களின் ஆடுகள் மூலமாக சொல்கிறார்.

பெருமாள் முருகனின் "ஒடை" கதையில் ஆட்டு கிடாய்க்கு ஒடை (நலம்) அடிக்கும் சம்பவத்தை வைத்து எழுதப்பட்டதாகும்.

கிரேக்க தொன்மத்தில் ஆட்டுக்கு முக்கிய இடம் உண்டு. ஸீயஸுக்கு பால் கொடுத்து வளர்த்ததே ஒரு ஆடுதான். Zeus இன் அப்பா பிறந்தவுடன் தன் குழந்தைகளை விழுங்கிவிடுவாராம். அதனால் ஸீயஸின் அம்மா இவரை காட்டில் ஒளித்து வைக்க அங்கிருந்த காட்டு தேவதைகள் அவரை ஆட்டுப் பாலுடன் வளர்த்தார்களாம். அதுதான் நட்சத்திரங்களிடையே Capricorn vd;w Constellation ஆக ஆடு வடி வத்தில் உருவாக்கிவைத்தாராம்.

இன்னொன்று, உலகின் முதல் கொலையே ஆட்டினால்தான் நடந்தது" தெரியுமா?

காயீனும் ஆபேலும் தத்தமது பலிகளைக் கடவுளுக்குக் கொடுத்து வந்தார்கள். அவர் கள் தனித்தனியே இரண்டு பலிபீடங்களைக் கட்டி அவற்றின் மீது ஆட்டின் நல்ல இறைச்சித் துண்டுகளை வைப்பார்கள். விண்ணிலிருந்து நெருப்பு இறங்கி வந்து அவற்றை எரிக் கும். தங்களின் நைவேத்தியத்தை இறைவர் ஏற்றுக் கொண்டதற்கு அதுவே அடையாளம்.

ஒவ்வொரு நாளும் நல்ல துண்டை ஏன் தீயில் இட வேண்டும்? பலியினால் என்ன பயன்? நம் உழைப்பை ஏன் வீணடிக்க வேண்டும்! என காயின் யோசிக்கிறான். அந்த எண்ணத்தின் மேற்சென்று மிச்சமீதிகளை பலி பீடத்தில் வைக்கிறான். ஆபேலோ தன்னுடைய மந்தையில் இருந்து கொழுத்த ஆட்டை வெட்டிப் படைக்கிறான். காயினின் பலி ஏற்றுக் கொள்ளப்படாமல், ஆபேலின் கண்ணப்ப நாயனார் போன்ற காணிக்கை மட்டும் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

போதாக்குறைக்கு தம்பி ஆபேல், அண்ணன் காயினிற்கு ஆலோசனையும் புத்திமதியும் வேறு வழங்குகிறான். "ஒரு தடவைதானே கடவுள் எடுத்துக்கொள்ளவில்லை" கவலைப்படாதே" அடுத்த முறை ஆட்டின் தொடையை நன்கு செய்து எடுத்து வா! இறைவரிடம் நானே உனக்காக இறைஞ்சிக் கேட்கிறேன். எடுத்துக் கொள்வார்!... என் கிறான். கோபம் தலைக்கேறிய காயின், தம்பியைக் கொல்கிறான்.

இதுதான் முதல் கொலை.

இந்துமதத்திலும் ஒரு கதை உண்டு. தமிழ்நாட்டிலுள்ள திருவாடானை சுக்கிர தோஷ பரிகாரத்துக்கான திருத்தலம்..

ஒருமுறை துர்வாசர் தவம் செய்து கொண்டிருக்கையில் வருணனின் மகன் வாருணி என்பவன், முனிவரது தவத்துக்கு இடையூறு செய்ய, கோபக்கார ரான துர்வாசர் கொடுத்த சாபத்தில் ஆட்டுத் தலையும் யானை உடலும் கொண்ட வினோத வடிவத்தைப் பெற்றான். பிறகு துர்வாசரிடமே மன்னிப்புக் கேட்க, பன்னிரண்டு ஆண்டுகள் அப்படியே தண்டனை அனுப விக்க வேண்டும் அதன்பின், பாரிஜாதவனத்துக்குச் சென்று ஆதிரத்தினேஸ்வரரை வழிபட் டால், சாபம் நீங்கும் என்றார்.

வாருணி அவ்வாறே செய்ய, ஆடும் ஆனையுமாக வழிபட்டுச் சாபம் நீங்கிய இடம் என்பதால், ஆடானை ஆனது; அங்குள்ள இறைவனும் ஆடானைநாதர் (அல்லது அஜகஜேஸ்வரர் அஜம் - ஆடு, கஜம் - யானை) ஆனார்.

ஆனைப்பசிக்கு ஆடு வாய்மூலம் தழை சாப்பிட்டு பசியாற முடியுமா. 12 வருஷம் வாருணி பசியில் தவித்தானாம். இந்த துர்வாசர்




இப்படியெல்லாம் சாபம் கொடுப்பதிலே ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கியிருப்பாரோ!

சூரசம்ஹாரத்தின் போது ஆட்டின் மீது முருகன் வரு வாரே! அதவாயு என்ற பசுவை வைத்துக் கொண்டு நாரதர் யாகம் செய்கிறார். அந்தப் பசு பயங்கரமாக சத்தமிட்டு, ஆட்டை பிரசவிக்கிறது. முரு கனின் சேனாதிபதி வீரபாகு அதை அடக்கினார். கந்தனுக்கு காணிக்கையாக்கினார். அப்படித்தான் சிங்காரவேலனுக்கு ஆடு அரோகரா ஆனது.


அகத்தியரும் "வாதாபி ஜீரணோ பவ" என ஆட்டை விழுங்குகிறார்.

அவ்வளவு ஏன், தமிழின் ஆரம்பமே அ - அம்மாவுக்கு அடுத்தது ஆ - ஆடுதானே?

---

# முதன்முதலில்...!

- முதன்முதலில் அரசியல் கார்ட்டூன் வரைந்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின். தமிழில், பாரதியார்.
- உலகில் ரோமானியர்கள்தான் முதன்முதலில் பத்திரிகை வெளியிடும் முறையைக் கொண்டு வந்தனர்.
- உலகில் முதன்முதலில் பருத்தி ஆடை நெய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்கள்.
- உலகிலேயே இரகசிய வாக்கெடுப்பு முறை 1856 இல் தெற்கு அவுஸ்திரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ரஷ்யா முதன்முதலில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டது 1952 இல்தான்.
- தற்போதுள்ள முச்சக்கர வாகனங்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தியது இத்தாலியைச் சேர்ந்த வெஸ்பா ஸ்கூட்டர் தயாரிப்பு நிறுவனமான பியாஜியோ நிறுவனம்தான்.
- பரீட்சை எழுதும் முறையை உலகுக்கு அறிமுகம் செய்த நாடு சீனா.
- உலகில் முதன்முதலில் புகையிலை விற்பனை மற்றும்



பொது இடங்களில் புகைப் பிடிப்பதை தடைசெய்த முதல் நாடு பூட்டான்தான்.
- இந்தியாவின் இலக்கிய உயர்விருதான ஞான பீட பரிசு பெற்ற முதல் பெண் எழுத்தாளர் வங்காள எழுத்தாளர் ஆஷா பூர்ணதேவி.
- முதன்முதலாக டின்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகளை போர்க்காலங்களில் பயன்படுத்தியது நெப்போலியனின் படைகள்தான்.
- மின்சார உயர்த்திகள் (Lift) முதலில் புழக்கத்திற்கு வந்தது 1889 ஆம் ஆண்டு - அமெரிக்காவில்.
- முதன்முதலில் பாண்டேஜ் துணியை அறிமுகம் செய்தவர்கள் எகிப்தியர்கள்தான்.
- முதன்முதலில் முகப்பவுடர் தயாரித்தவர்கள் இத்தாலியர்கள்.
- முதன்முதலில் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட பொருள் சிலுவை.
- இந்திய வேதங்களை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் மாக்ஸ் முல்லர் என்ற ஜேர்மானியர்.

---



## அதிக பிரதிகள் விற்றுள்ள நூல்கள்!

உலகில் அதிக பிரதிகள் விற்றுள்ள நூல்களின் ஆசிரியர்களாக ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரும், துப்பறியும் நாவலாசிரியை அகதா கிறிஸ்ரியும் திகழ்கின்றனர். இவர்கள் இருவரதும் நூல்கள் சுமார் 200 கோடி பிரதிகள் வரை விற்பனை ஆகியிருக்கின்றன! இவர்களுக்கு வெகுதூரம் பின்தள்ளித்தான், பிரெஞ்சு, ஜெர்மன், ருஸ்ய, சீன எழுத்தாளர்களின் நூல்கள் விற்பனையாகி இருக்கின்றன. இந்த அணிவகுப்பில் இந்திய எழுத்தாளர்கள் எவரும் நரமத்துக்கும் இல்லை.

# வாசகர் கடிதம் எழுதும் கலை

- பேயோன் -

வாசகர் கடிதம்... சிறுகதையும் கட்டுரையும் தொலைபேசி அழைப்பும் கலந்த இந்த இலக்கிய வடிவம் கடந்த நாற்பதாண்டுகளாகக் காலங்காலமாய் படைப்பாளிகளை ஈர்த்துவந்திருக்கிறது. ஏனெனில் புனைவிலும் கட்டுரையிலும் சொல்லத் தெரியாத விசயங்களை வாசகர் கடிதத்தில் எழுதலாம். "தன்னைப் பற்றியே பேசுகிறான்" என்ற வசைக்கு இடமளிக்காமல் சுயபுராணம் 'பாட இதில் வசதியுண்டு. அது போலவே, இன்னொருவர் பெயரில் நம்மை நாமே வகைதொகையின்றிப் புகழ்ந்துகொண்டு மகிழலாம். இது கடல் போன்ற ஒரு துறையாகும்.



பல எழுத்தாளர்கள் சக எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் எழுதும் கடிதங்களில் அரிய சொந்தக் கருத்துகளைப் பதிவு செய்கிறார்கள். பின்னர் அக்கடிதங்களைத் தொகுத்து "இன்னார் கடிதங்கள்" என்று புத்தகமாய்ப் போட்டுக்கொள்கிறார்கள். பிரசுரம்தான் இக்கடிதங்கள் எழுதப்படுவதன் நோக்கம். பல எழுத்தாளுமைகள், "எனக்குக் கடிதம் எழுது, நான் பதில் போட வேண்டும்" என்று கேட்டுப் பெறுகிறார்கள்.

இங்கே ஒரு விசயம்: படைப்பாளிகளுக்கு வாசகர் கடிதம் எழுதிக்கொண்டிருந்த தலைமுறையினரில் பலர் இன்று முதியோர் இல்லங்களுக்குச் சென்றுவிட்டார்கள். மற்றும் பலர் இறந்துவிட்டார்கள். இன்னொரு பக்கம் எழுத்தாளர்களை அணுகுவது இன்று மின்னஞ்சலால், சமூக வலைத்தளங்களால் எளிதாகியுள்ள அதே சமயத்தில் வாசகர் கடிதங்களின் தரம் குறைந்துவருகிறது. இதனால்தான் இன்று பல எழுத்தாளர்கள் வாசகர்கள் அனுப்ப வேண்டிய கடிதங்களையும் தாமே எழுதுகின்றனர். சொல்லப்போனால், எழுத்தாளன் போன்ற முதிர்ச்சியான, பண்பட்ட, சாமர்த்தியமான, நகைச்சுவை உணர்வு மிக்க, கண்ணியமான, தன்னலமற்ற, குழந்தைமை கொண்ட, நியாயமான, கழிவிரக்கம் செறிந்த, அறிவுக் கடலான ஓர் ஆளுமைக்குக் கடிதம் எழுதும் தகுதி இன்னொரு எழுத்தாளனுக்கே இருக்கக்கூடும். ஆனால் எந்த எழுத்தாளன் இன்னொரு எழுத்தாளனின் புத்தகத்திற்காக உழைப்பான்? அதனால்தான் நம் வாசகர் கடிதங்களை நாமே எழுத வேண்டியுள்ளது. கேள்வி-பதில் பகுதிக்குக் கேள்விகள் எழுதுதல் என்கிற இதழியல் மரபு முன்னமே இதற்கு அடிகோலியுள்ளமை கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

வாசகர் கடிதம் எழுதுதல் வெறும் சுயசொறிதலாக எடை குறைத்துப் பேசப்படக் கூடாது. எப்போதும் ஒரே வாசகரே கடிதம் எழுதிக்கொண்டிருப்பதில்லை என்பதால் ஒவ்வொரு கடிதத்தையும் ஒவ்வொரு வாசகர் எழுதுவதாகக் காட்ட வேண்டும். ஒவ்வொரு வாசகருக்கும் தனித்தனி எழுத்துநடையைக் கையாள வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான எழுத்துப் பிழைகளைச் செய்ய வேண்டும். அவர்கள் ஒவ்வொரு விதமான கருத்துகளைக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, ஒவ்வொரு வாசகருக்கும் பெரும்பாலும் வெவ்வேறு பெயரும் ஊரும் இருக்க வேண்டும். ஒரு ஊரில் எல்லோருக்கும் ஒரே பெயர் இருக்க முடியுமா? கடிதங்களில் யதார்த்தச் சித்தரிப்பு, எழுத்தாளனின் படைப்பூக்கத்திற்கு மிகத் திருப்திகரமானதொரு சவாலாகும்.

எழுத்தாளர்கள் தமக்கு வாசகர் கடிதம் எழுதிக்கொள்வதில் ஓர் அணுகுமுறை வைத்திருப்பார்கள். நான் எனது உத்தியை விளக்குகிறேன். இதற்குத் தேவையான கருவிகள்:

நேரம் (மிக அவசியம்)
டெலிபோன் டைரக்டரி (ஓரளவு அவசியம்)
நாட்டின் வரைபடம்
சொந்தக் கருத்துகள் (இருந்தால் பயன்படும் சாத்தியங்கள் அநேகம்)

டெலிபோன் டைரக்டரியை ஏன் சொல்கிறேன் என்றால் வாசகருக்குப் பெயர் வைப்பது அல்லது அவர் பெயரை ஊகிப்பது நேரத்தைக் கபளீகரம் செய்யும். பெயர்களை யோசிப்பதில் நாமறியாது நேரம் கரையும்போது நாம் எழுத நினைத்திருக்கும் விசயங்கள் மெல்லக் கனவாய்ப் பழங்கதையாய் மனதின் ஆழ்வெளிகளில் ஒரேடியாகத் தொழுதுண்டு பின் சென்றுவிடும் அபாயம் உள்ளது. அதே சமயத்தில் சட்டென மனத்தில் உதிக்கும் பெயர்களை வைத்தால் படிப்பவர்கள் சந்தேகப்பட வாய்ப்பிருக்கிறது. டைரக்டரியில் உள்ள பெயர்களைப் பயன்படுத்தும்போது பெயர்களுக்கு ஓர் உண்மைத்தன்மை கிடைக்கிறது. ஊர் பெயரைத் தேர்ந்தெடுக்க நாட்டின் வரைபடம் போதும்.

அடுத்து இந்த "சொந்தக் கருத்து" என்கின்ற கருத்தாக்கம். சொந்தக் கருத்து என்பது கசப்பான சவாலாக இருக்கத் தேவையில்லை. பலர் சொந்தக் கருத்தையும் தனித்துவமான கருத்தையும் குழப்பிக்கொண்டு சஞ்சலம் அடைகிறார்கள். இந்த அநாவசியத் தலைவலி தேவையே இல்லை. நாம் என்ன சொல்கிறோமோ அதுதான் சொந்தக் கருத்து. முக்கியமான விசயம், அது நம் பெயரில், நம் வார்த்தைகளில் இருக்க வேண்டும். நக்கல், நையாண்டி, சிற்றிதழ் பதங்கள், வெகுஜன கலாசார சொல்லாடல்கள் போன்ற நகாசுகளை இடைச்செருகினால் வாசகர்களைச் சுண்டியிழுக்கும். இது நிஜமான வாசகர் கடிதங்கள் வரச் செய்துவிடும் என்பதே இதிலுள்ள ஒரே பிரச்சினை.

இப்பயனுள்ள கையேடு ஒரு கோடிகாட்டல் மட்டுமே. நீ என்ன சொல்வது, நான் என்ன செய்வது என்று உங்களுக்குப் பட்டால் நீங்கள் வேறு உத்திகளை உருவாக்கிக்கொள்ளலாம்.

---


# ‘ஷோக்’ கொடுக்கவும் தெரியும் ‘ஷோக்கு’ பண்ணவும் தெரியும்...

- ஆரூர்தாஸ் -

1

சென்னை தேனாம்பேட்டை! இந்தப் பகுதி அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி நாடக மற்றும் சினிமா நடிகர் - நடிகையரின் கேந்திரஸ்தானம்!

பழைய புராண நாடகங்களாகட்டும், புதிய சமூக நாடகங்களாகட்டும், தேர்தல் பிரசார ஸ்பெஷல் நாடகங்களாகட்டும்; சினிமாவில் சிறு சிறு வேடங்களுக்குத் தேவையான நல்ல நடிப்புப் பயிற்சி பெற்ற நடிகர், நடிகையராகட்டும் மற்றும் டப்பிங் குரல் கொடுக்கும் கலைஞர்களாகட்டும் இங்கு போனால் போதும். ஏராளமாகக் கிடைப்பார்கள்.



அங்கே போயஸ் தெருவில் "நடிகவேள்" எம்.ஆர்.ராதா அண்ணனின் மாடி வீடு! காரை ஒருபுறம் நிறுத்திவிட்டு உள்ளே சென்றேன்.

வீட்டில் இருக்கும்போது மட்டும் அணியும் வெள்ளை நிற அரைக்கால் சட்டை! முண்டா பனியன்! அதன் மீது தந்தை பெரியாரின் உருவம் பதித்த டாலருடன் கூடிய தொப்புள் வரை நீண்டு தொங்கும் தங்கச் சங்கிலி.

இடது கரத்தில் தங்கச்செயினுடன் சேர்ந்த ரிஸ்ட் வாட்ச்! ஆள் காட்டி மற்றும் நடுவிரல்களுக்கு இடையில் பழைய கரி என்ஜின் போல ஓயாது புகைந்து கொண்டிருக்கும் சிகரெட்!

குளித்து முடித்து கையால்கூட கோதி விட்டுக் கொள்ளாது பரந்து விரிந்து கிடக்கும் சுருள் முடி!

இந்த நிரந்தர அடையாளங்களுடன் கூடிய அந்த அதிசய - அற்புத - அபூர்வ - அஞ்சா நெஞ்சம் கொண்ட மனிதர்தான் மதராஸ் ராஜகோபால் நாயுடுவின் தவப்புதல்வர் ராதாகிருஷ்ணன் என்கிற "நடிகவேள்" எம்.ஆர்.ராதா!

என்னைப் பார்த்த மாத்திரத்திலேயே இருக்கையிலிருந்து எழுந்து, அவருக்கே முழுக்க முழுக்க உரித்தான - வழக்கமான அந்த அவரோகண - ஆரோகணக்குரலில் சிரிப்போடு கலந்து... "ஆ! தாசு! வாவாவா...

இப்போதான் ராமச்சந்திரன் எனக்கு போன் பண்ணி எல்லாத்தையும் விவரமா சொன்னான்.

' ரெடிமேடா ஒரு திடீர்க் கதையை அரை மணி நேரத்துக்குள்ளே சொல்லி, அதுக்கு ஒரு அருமையான டைட்டிலும் வச்சு அவனை அசத்தியிருக்காய். அது உன் ஒருத்தனாலதான் முடியும். "பெற்றால்தான் பிள்ளையா" அவனுக்கேத்த தலைப்புதான்!

நீ என்னதான் அப்படி வசியம் வச்சிருப்பியோ தெரியலே. இந்த ரெண்டு பேருமே (எம்.ஜி.ஆர், சிவாஜி) உங்கிட்டே மயங்குறானுங்க. அவனுங்களுக்குள்ளே ஆயிரம் இருக்கு. ஆனா உன்னை மட்டும் விடமாட்டேங்குறானுங்க. சும்மா இல்லே. உங்கிட்டே சரக்கு இருக்கு.

இதோ பார், உனக்கு ஒண்ணு சொல்றேன். நான் பழைய பக்கா நாடகக்காரன்! உன்னை மாதிரி ஆசிரியர்ங்க மேலே மதிப்பும், மரியாதையும் உள்ளவன்.

ஒரு மதுரை சச்சிதானந்தம் பிள்ளை இல்லேன்னா, நான், கே.பி. கேசவன், காளி என்.ரத்தினம், டி.ஆர். பி.ராவ், பாலையா, எம்.ஜி.சக்ரபாணி, ராமச்சந்திரன் எவனுமே இன்னிக்கு இல்லே...

அன்னிக்கு ஒரு கந்தசாமி முதலியார் இல்லேன்னா, இன்னிக்கு ஜெமினி எஸ்.எஸ்.வாசன்னா யாருன்னே எவனுக்குமே தெரியாது.

நான் சொல்றதை நல்லா கவனி... இப்போ நான் ஒரு உண்மையை உனக்குச் சொல்லப்போறேன். இதை என்னைத்தவிர வேற எந்த ஒரு நடிகனும் தைரியமா சொல்லமாட்டான். நான்தான் சொல்லுவேன் - அடிச்சு சொல்லுவேன். அழுத்தந்திருத்தமா சொல்லுவேன்...

சற்று முன்வந்து தன் முகத்தை என் முகத்துக்கு நேரே நீட்டிக்காட்டியவாறு, "இந்த முகந்தான் எங்களது. மூளை உங்களது. நீங்க இல்லேன்னா நாங்க இல்லே. ஆனா - எங்க முகத்துக்கு இருக்குற விலை மதிப்பு உங்க மூளைக்குக் கிடையாது. அதுதான் இந்த சினிமா மார்க்கெட்."

இதைக்கேட்டதும் அருகில் அமர்ந்திருந்த இரட்டை இயக்குனர்களான கிருஷ்ணனும், பஞ்சுவும் பலமாகக் கைதட்டினார்கள்.

ஒரு கணம் உணர்ச்சிவசப்பட்ட நான் குனிந்து ராதாண்ணன் கால்களைத் தொட்டேன்.

உடனே அவர் தன் கால்களைப் பின்வாங்கிக்கொண்டு சொன்னார்:

-சேச்சே! காலைத்தொடாதே. அது எனக்குப் பிடிக்காது. நான் பெரியார் வழி வந்தவன். அதுலேயும் நீ ஒரு ஆசிரியர். வயசுல சின்னவனா இருக்கலாம். ஆனால் மூளையைச் செலவழிச்சு எழுதி எங்களுக்குச் சொல்லிக் குடுக்குற குரு! வேணுன்னா ஒரு கும்பிடு போடு. அது போதும்.

நான்: அண்ணே! இது எம்.ஜி.ஆர். அண்ணனுக்கு முழுக்க முழுக்க ஒரு மாறுபட்ட படமாக இருக்கும். அதோட, உங்களுக்கும் இதுவரைக்கும் நீங்க செய்யாத ஒரு வித்தியாசமான வேஷத்தைக் கொடுத்து உங்களை ஆடவும் வைக்கப்போறேன்.

எம்.ஆர்.ஆர்: அப்படியா? கொடு செய்றேன். எந்த வேஷம் வேணுன்னாலும் கொடு. ஆடச்சொல்றியா? ஆடுறேன் - பாடச்சொல்றியா? பாடுறேன். பின்னிடுவேன் பின்னி!

நான் யார் தெரியும்ல - சின்ன வயசுல முதல் முதல்லே கன்னையா நாயுடு கம்பெனியில எலக்ட்ரீஷியனா இருந்து அப்புறம் நடிகன் ஆனவன்.










எனக்கு "ஷொக்" கொடுக்கவும் தெரியும். "ஷோக்கு" பண்ணவும் தெரியும்... ஆ... என்று சொல்லி அவருடைய வழக்கமான அந்தப்பாணியில் விட்டு விட்டு விக்கி விக்கிச் சிரித்தார்.

வழக்கம்போல அவருடைய அந்தச் சிரிப்பை நான் ரசித்தேன்!

(தொடரும்)









# நிகழ்வுகளின் பதிவுகள்....


கலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கலாசாரப்போட்டிகளில் வெற்றிபெற்ற தென்மராட்சியைச்சேர்ந்தவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது கோட்டக்கல்விப்பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதையும், வெற்றிபெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும், மாணவியின் நடனநிகழ்வையும் காணலாம். (11)








யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடாத்திய பாரதி விழா அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் இணையத்தளத்தை வடிவமைத்த தவரூபனுக்கு பொன்னாடை போர்த்திக்கௌரவிப்பதையும், நாடக நிகழ்வினையும், கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (48)







வன்னி பிராந்திய கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தின நிகழ்வும் பெண்களைக் காப்போம் எனும்பொருளிலான பேரணியும் அண்மையில் நடைபெற்றது. புனித திரேசாள் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற நிகழ்வைக் காணலாம். (90)



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தினால் வழங்கப்பட்ட ஒரு தொகைப் பணத்தை மன்ற இயக்குனர் அருட்திரு ஸ்ரீமரியசேவியர் வழங்குவதைக் காணலாம். (27)




புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கு கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் இலவச மரக்கன்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன இதில் லயன்ஸ் கழக எஸ். சிவஞானம் மரக்கன்று வழங்குவதைக் காணலாம். (01)

# மின்வழங்கலில் குறைபாடுகளைத் தீர்க்க நுகர்வோர் சங்கம் அங்குரார்ப்பணம்

வடமாகாணத்திற்கான மின்விநியோகம் தொடர்பிலான முதலாவது ஆங்குரார்ப்பணக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கான பிராந்திய நுகர்வோர் சங்கம் அமைக்கப்பட்டுள் ளது. மகிழ்ச்சியளிக்கிறது.

வலி. தென்மேற்கில் உருவாக்கப்பட்ட மேற்படி சங்கத்தின் ஊடாக மக்கள் மின் விநியோகம் தொடர் பிலான குறைநிறைகளை தெரிவித்து நடவடிக் கைகளை உடனுக்குடன் மேற்கொள்ளலாம். என வலி. தென்மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச மின் விநியோக பிராந் திய நுகர்வோர் சங்கத்தின் தலைவர் ச.செல் வரத்தினம் தலைமையில் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை மின்சார பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வடமாகாண நுகர்வோர் ஆலோசனைக்குழு உறுப்பினர் எந்திரி. வி.வேலுப்பிள்ளை கலந்து கொண்டார்.

இதில் கலந்து கொண்ட உதவிப்பிரதேச செயலாளர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரம் தொடர்பான இடர் ஏற்படும் போதே அல்லது புதிய இணைப்புக்களை பெறும் போதே மக்கள் யாருக்கு விண்ணப்பம் செய்வது முறை யிடுவது தொடர்பில் மக்கள் இடர்பாடுகளை சந்தித்து வந்துள்ளனர்.

தற்போது நாடு தழுவிய ரீதியில் 2002இல் உருவாக்கப்பட்ட மின்சாரம் தொடர்பான பிராந் திய நுகர்வோர் சங்கம் முதன் முதலாக வடக்கு மாகாணத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செய லாளர் பிரிவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான முழுமையான ஆலோசனை களையும், விபரங்களையும், திட்ட விபரங்களை யும், குழுவின் அதிகாரம் தொடர்பாகவும், இலங்கை பொதுப்பயன்பாடுகள் தொடர்பான ஆணைக்குழுவின் வடமாகாண நுகர்வோர் ஆலோ சனை குழு உறுப்பினர் எந்திரி வி. வேலுப் பிள்ளை துண்டுப்பிரசுரங்கள், விளக்க வரை படங்கள், அறிக்கைகள் ஊடாக விளக்கியுள் ளார்.

எனவே வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குள் உருவாக்கப் பட்டுள்ள பிராந்திய நுகர்வோர் சங்க கீழ்வரும் பிரதிநிதிகளுக்கு ஊடாக மக்கள் தங்களுக்கு மின்விநியோகம் தொடர்பில் ஏற்படும் இடங் களைத் தெரிவிக்கலாம் என்றார்.

இதில் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலகத்திற்கு உட்பட்ட 12 பேர் மின் தொடர்பான பிராந்திய நுகர்வோர் சங்க பிரதிநிதி களாக தெரிவு செய்யப்பட்டு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத் தப்பட்டனர்.

அவர்கள் விபரம் வருமாறு:

எஸ். லிங்கேஸ்வரன் மாதகல், எஸ்.செல்வரத் தினம் பண்டத்தரிப்பு, வி.ரி.ரட்ணசிங்கம் மானிப் பாய், ரி.தர்மபாலசிங்கம் சாந்தை, எஸ்.ரமேஷ் நவாலி, ஆர்.ஜீவகுமார் பண்டத்தரிப்பு, ஜி.பேர் ணாட் இளவாலை, ஏ.எம்.ஜெயமாணி மாதகல், கே.சிவசுப்பிரமணியம் பண்டத்தரிப்பு, ஏ.ஜெ.யேசு தாசன் இளவாலை ஆகியோராவார்.

பிரதமவிருந்தினர் கருத்துத் தெரிவிக்கையில் வடமாகாணத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்கான முதலாவது மின்விநியோக பிராந் திய நுகர்வோர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு ஏனைய பிரதேச செயலாளர் பிரிவிலும் விவாதிக்கப்படும்.

இச்செயற்பாடுகள் முனைப்பு நிகழ்சியை அடைய வேண்டும்.

இதற்காக வலி. தென்மேற்கு பிராந்திய நுகர் வோர் சங்கத்தின் தலைவர் ச. செல்வரட்ணம், வலி. தென்மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வகு மாரி ஆகியோர் இணைந்த வகையில் இச் சங்கம் உருவாக முனைப்புடன் செயற்பட்டதை பாராட்டு கின்றேன் என்றார்.

அத்துடன் மின்சார நுகர்வோருக்கு உரிய உரிமைகள் சலுகைகள் தொடர்பான மூன்று விளக்கக் குறிப்புக்களை வழங்கினார்.

சங்கத்தின் செயலாளர் டாக்டர் எஸ். லிங்கேஸ் வரன் நன்றியுரை கூறினார்.

# கணனிகள் திருட்டு

(அச்சுவேலி)

அச்சுவேலி பத்தமேனி இரத்தினேஸ்வரி வித் தியாசாலையில் உள்ள கணனிகள் இனந்தேரி யாத நபர்களால் நேற்று இரவு திருடப்பட்டுள்ள தாக பாடசாலை அதிபரினால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பாடசாலை விடுமுறைகாலத்தில் இத்தகைய நாசகார வேலையை மேற்கொண்டதனால் பாட சாலைக்கு பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பாட சாலை சமூகத்தினரால் கவலை தெரிவிக்கப்பட் டுள்ளது. எனவே மேற்படி சம்பவத்துடன் தொடா புடையவர்கள் யார் என இதுவரையில் கண்ட றியப்பட வில்லைஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(85)

# யாழ். மறைமாவட்டத்தின் நற்கருணைக் கண்காட்சி





யாழ். மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில் நற்கரு ணைக்கண்காட்சி கடந்த 11ஆம் திகதி காலை 9.15 மணியளவில் புனித அந்தோனியார் ஆலய நற்செய்தி அறிவிப்பு மண்டபத்தில், நடை பெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினர் சில் லாலை றோ.க.த.க பாடசாலையின் அதிபர் ஜே.எட்வேட் பங்கிராஸ் நாடா வெட்டி வைத்து கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட் தந்தை வண. அகஸ்ரின் அடிகளாரும்,இளவாலை மறைக்கோட்ட இயக்குனர் அருட்தந்தை வண. ஜோதிநாதன் அடிகளாரும் மானிப்பாய் பங்குத் தந்தை வண ஜேம்ஸ் அடிகளாரும் கலந்து கொண்டனர். நிரந்தர மறையாசிரியர்களான அந்தோனிப்பிள்ளை, பங்கிராஸ் ஆகியோர் ஒழுங்கமைப்பாளர்களாகவும் வழிகாட்டிகளாகவும் செயற்பட்டனர்.

மேலும் அருட்சகோதரிகளும் இளவாலை மறைக்கோட்ட மறையாசிரியர்களும், மறைப் பாட சாலையின் மாணவர்களும் பங்குபற்றியிருந் தனர். அதிகமாக நற்கருணைப்புதுமைகளை எடுத்துக்கூறும் வகையில்காட்சிப்படுத்தப்பட்டி ருந்த தரவுகளுடன் கூடிய படங்கள் உயர் மறை மாவட்டமான கொழும்பிலிருந்து தருவிக்கப் பட்டவை.

உயர் மறைமாவட்ட பேராயர் காடினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஆலோசனையும் அபய சேகரா என்பவரது முயற்சியும் 5ஆவது பிரதேச மான இளவாலை மறைக்கோட்டத்தில் செயல் வடிவம் பெற்றிருக்கிறது. இதற்கு முன்னர் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த மாதம் 23ஆம் திகதியும், கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்தமாதம் 30ஆம் திகதியும், தீவகத்தில் கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளிலும், பருத்தித்துறையில் கடந்த 7ஆம் 8ஆம் திக திகளிலும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இந் நிகழ்வில் உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற நற்கருணையின் புதுமைகளைத் தொகுத்த காணொளியும் காண்பிக்கப்பட்டது.(114)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

5 மாதங்களுக்கு மட்டும் தங்கியிருந்து வேலை செய் யக்கூடிய பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க் கின்றோம் தனி அறை சகல வசதிகளும் உண்டு தொடர் புக்கு 0777970185.

---

உங்களுக்கான தொழில் சம்பளம் 35 ஆயிரத்துக்கு மேல் வயது 17-55 ஆண், பெண் கொழும்பு, யாழ்ப் பாணம், வவுனியா, மட்டக்களப்பு, குருநாகல், பதுளை, வெலிமடை, கண்டி, நுவரெலியா ஹட்டன் ஆகிய நிறு வனங்களுக்கு ஆட்சேர்ப்பு, பிஸ்கட், சொக்லேட், கிளவுஸ், யோகட், பொலித்தீன் என்பவற்றில் உற்பத்தி லேபல், பொதியிடல் பிரிவில் வேலைவாய்ப்பு துறைமுகம் விமான நிலையம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் Hotel வேலை வாய்ப்புக்களும் உண்டு. உணவு தங்குமிடம் உண்டு தொடர்புக்கு 0778508118.

---

கட்டட வேலைக்கு மேசன் மற்றும் உதவியாளர் தேவை. தொடர்புக்கு 0778160755.

---

தனியார் நிறுவனத்துக்கு சாரதி உதவியாட்கள் தேவை. 48,000 நிரந்தரத்தொழில் உணவு, தங்குமிடம் தொடர்புக்கு 0777554068, 0754763658.

---

ஜேம், பிஸ்கட், பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்,பெண் இணைத்துக்கொள்ளப்படுவர் தொடர்புக்கு 0777554068.

---

புதிய வருடத்தில் உங்கள் எதிர்காலத்தை வளமாக மாற்றுங்கள் ஜேம், பிஸ்கட், கோடியல், கிளவஸ், பிளாஸ் ரிக் பொலித்தீன் போன்ற பிரதான உற்பத்தி நிறுவனங் களில் லேபல் பொதியிடல் தரம், பிரித்தல் போன்ற வெற்றிடங்களுக்கு ஆண்டு பெண் 17-48 வயதுடையோர் தேவை. வேலையின் அடிப்படையில் 18ஆயிரம் முதல் 38 ஆயிரம் ரூபாவரை மற்றும், உணவு, தங்குமிட வசதி குறைந்த விலைகளில் உண்டு தொடர்புக்கு 0770734757.

---

கல்வி நிறுவனம் ஒன்றுக்கு நிர்வாக உதவியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆண்களுக்கு தங்குமிடவசதி வழங்கப்படும் தொடர்புக்கு 0112445058.

---

முல்லைத்தீவில் இயங்கி வரும் பிரபல உணவகத்திற்கு கொத்துரொட்டி, அப்பம் மற்றும் சமையல் வேலை தெரிந்தவர்கள் உடன்தேவை. தொடர்புக்கு 0775360958.

---

கட்டட நிர்மாணத்துறையில் வேலை செய்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு மேசன், டைல்ஸ், பெயின்டர், வெல்டர், இலக்ட்ரீசியன், மற்றும் கையுதவியாட்கள் தேவை. வார மாத சம்பளம் வழங்கப்படும் தினமும் செலவுப் பண முண்டு. தொடர்புக்கு 0771913204.

---

வேலைவாய்ப்புக்கள் ஆண், பெண் வயது (18-30) உற்பத்தி தொழிற்சாலைக்கு தேவை. சம்பளம் 18 ஆயிரம்முதல் 25ஆயிரம் வரை தொடர்புக்கு 0715222967, 0770711212.

---

சந்தை முகாமைத்துவத்தில் அனுபவமிக்க நிறுவ னத்தில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலைவாய்ப்பு தொடர்புக்கு 0777933685, 0750757599.

---

இலங்கை முன்னணி வங்கியின் காப்புறுதி நிறுவன மொன்றில் கொழும்பு கிளையில் தொழில் புரிவதற்கான சந்தர்ப்பம் க.பொ.த. சா/தாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அழைக்கவும் தொடர்புக்கு 0758013903.

---

எங்களுடைய நிறுவனத்துக்கு ரைஸ், அன்ட் கறி, பிரைட் ரைஸ், கொத்து பாஸ் ஒருவர் தேவைப்படுகின்றார். தொடர்புக்கு 0776146825.

---

படித்துவிட்டு எவ்வித வேலைவாய்ப்பும் இன்றி வேலை தேடுவோர் உங்கள் விபரத்துடன் தொடர்பு கொண்டால் வேலை தரப்படும் தொடர்புக்கு 0727165060, 0777165060.

---

இலங்கையில் பிரபலமான நிறுவனத்தின் SIS சான்றிதழ் பெற்ற ICETEA, ISO சான்றிதழ் பெற்ற தண்ணீர் போத்தல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட Sun Brand, செமன், நூடில்ஸ்.

# மாகாண சபைகளில் வினைத்திறனுக்கு பஞ்சம்

## ஒதுக்கப்பட்ட நிதிகள் மீண்டும் திறைசேரிக்கு

### சேவைக்காக ஏங்கித்தவிக்கும் மக்கள்

(கொழும்பு)

கடந்த 2012ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட 3526 மில்லியன் ரூபா நிதி, அதிகாரிகளின் அலட்சியத்தினாலும், நிர்வாகத் திறனின்மையாலும், செலவிடப்படாமல் மீளவும், திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுள்ளது.

இந்த விபரம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரம் ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுககுப் பதிலளித்த, உள்ளூராட்சி மாகாணசபைகள் பிரதி அமைச்சர் இந்திக பண்டார நாயக்க, இது தொடர்பான புள்ளிவிபரங்களை சமர்ப்பித்துள்ளார்.

வடக்கு மாகாணசபைக்கு கடந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், 10,153 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், 6627 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. செலவிடப்படாத எஞ்சிய 3526 மில்லியன் ரூபா நிதி மீளவும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் செயற்பட்ட அரச அதிகாரிகளின் அலட்சியப் போக்கினாலும், வினைத்திறனற்ற செயற்பாடுகளாலுமே, இந்தளவு நிதி திரும்பிச் சென்றுள்ளது.

வடக்கு மாகாணசபையில் மட்டுமன்றி கிழக்கு உள்ளிட்ட ஏனைய எல்லா மாகாணசபைகளிலும், ஆட்சியில் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிர்வாகங்களும் ஒதுக்கப்பட்ட நிதியை செலவிடாமல் திறைசேரிக்கு திருப்பி அனுப்பியுள்ளன.

கிழக்கு மாகாணசபைக்கு 2012ஆம் ஆண்டில், 12,577 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், 8531 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்ட நிலையில், எஞ்சிய 4,046 மில்லியன் ரூபா திறைசேரிக்கு திரும்பிச் சென்றுள்ளது.

மேல் மாகாணசபைக்கு 11,173 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், 6,957 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. மத்திய் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட 15,758 மில்லியன் ரூபாவில் 9,916 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டது.

தென்மாகாணசபைக்கு 13,792 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், 9,248 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணசபைக்கு 14,613 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், 9,237 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டது.

வடமத்திய மாகாண சபைக்கு 10,867 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், 6,848 மில்லியன் ரூபா மட்டுமே செல விடப்பட்டுள்ளது. ஊவா மாகாணசபைக்கு 11,102 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், 7,279 மில்லியன் ரூபாவே செலவிடப்பட்டது. சப்ரகமுவ மாகாணசபைக்கு 12,866 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், 8,531 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2012ஆம் ஆண்டில மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட 112,901 மில்லியன் ரூபா நிதியில், 73,077 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்ட நிலையில், எஞ்சிய நிதி திறைசேரிக்கு மீளத்திரும்பியுள்ளது.

# “தொழிற்சங்கமும் ஜனநாயகமும்”

## விசேடகருத்தரங்கு

(யாழ்.நிருபர்)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முனைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நடாத்தும் கருத்தரங்கு இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை மட்டக்களப்பிலுள்ள East Lagoon Hotel இல் நடைபெறுகிறது.

தொழிற்சங்கமும் ஜனநாயகமும் சிவில் நிர்வாகத்தில் அவற்றின் நிலைப்பாடும் பங்களிப்பும் என்னும் தொனிப்பொருளில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் கமினி குணரட்னா, சிரேஷ்ட விரிவுரையாளர்களான G.V.D.திலகசிறி, A.சர்வேஸ்வரன், S.ஜெய்சங்கர், ஊடகவியலாளர் V.தேவராஜ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.

தேசிய சமாதானப் பேரவையின் (NPC) அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் வினோபா இந்திரன், மட்டக்களப்பு அரச அதிபர் P.S.M.சார்ள்ஸ், தேசியசமாதானப் பேரவைத்தலைவர் ரொனி சென விரட்ண ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபடுவர். (10)

# இரத்திரனியல் அடையாள அட்டைக்கு கிளம்புகிறது புதிய எதிர்ப்பு அலை



(கொழும்பு)

2014ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இந்த புதிய அடையாள அட்டையில் முஸ்லிம் ஆண்கள் அணியும் தொப்பியும் பெண்கள் அணியும் பர்தாவும் கொண்ட புகைப்படங்கள் இருக்கமாட்டாது என ஆட்பதிவுத் திணைக்களம் அண்மையில் அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பினை அடுத்தே முஸ்லிம்கள் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் புதிய தேசிய அடையாள அட்டையில் முஸ்லிம்களின் அடையாளத்துக்கு தடை இருக்குமானால் முஸ்லிம்கள் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தொப்பியோ அல்லது பர்தாவோ முகத்தை மறைப்பது அல்ல என்றும் ஓராண்டுக்கு முன்னர் ஏற்கனவே இதுபோன்ற பிரச்சினை எழுந்தபோது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேசி தீர்வு காணப்பட்டது போல் இதற்கும் தங்களால் தீர்வு காண முடியும் என பிரதி அமைச்சர் பிபிசி தமிழோசையிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினை முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல ஏனைய மதங்களுக்கும் உள்ளது. குறிப்பாக, கத்தோலிக்க அருட் சகோதரிகளுக்கு கூட ஏற்படலாம் என்பதால் இதற்கு சகல தரப்பினரும் இணைந்து தீர்வுகாணவேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையில் காணப்படும் புகைப்படத்தில் எந்தவொரு மதத்தையோ சமூகத்தின் கலாசாரத்தையோ பிரதிபலிக்கும் வகையிலான எந்தவொரு அடையாளமும் இருக்கமாட்டாது என ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.சீரத்குமார தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்த ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணை யாளர், அடுத்த ஆண்டு யூன் மாதம் தொடக்கம் இந்த இலத்திரனியல் அடையாள அட்டை நடைமுறைக்கு வரும் என்றார்.

கலாசாரத்திற்கும் தேசிய அடையாள அட்டைக்கும் தொடர்பு இல்லை. முகத்தை வைத்து அடையாளம் காணும்போது தொப்பி அல்லது ஏனையவற்றை தலையில் அணிவதால் ஆட்களை அடையாளம் காண்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக சோதனைகளின் போது இப்படியான கஷ்டங்கள் ஏற்படுகின்றன என ஆட்பதிவுகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

சட்டத்தை அமுல்படுத்துவதே தனது கடமை என்றும் அதில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ செய்வதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பரமர் சங்கமம்



‘ஒரு தடவை சொன்னால் நூறு தடவை சொன்னது போல’ இந்த சினிமாப் பஞ் வார்த்தைதான் ஞாபகத்துக்கு வருகுது. உபகண்டத்தின் தற்போதைய நிலைப்பாடும் அப்படித்தான் காணப்படுகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீப் காந்தியைப் புலிகள் கொலை செய்ததற்காக மரண தண்டனைக் கைதிகளில் ஒருவராக இருக்கும் பேரறிவாளனின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த முன்னாள் இந்திய மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) அதிகாரி (எஸ்.பி) தியாகராஜன் என்பவர் சமீபத்தில் தெரிவித்திருக்கும் கூற்று இந்திய நீதித்துறையை மட்டுமில்லாமல் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைத்துள்ளது.

இந்தியப் பிரதமர் என்கின்ற ஒரேயொரு சீவனைக் கொன்ற குற்றத்துக்காக மூன்று பேர்கள் மரண தண்டனைக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். அதுபோல 2006ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் தலைவர்கொல்லப்பட்டார்.

பிரபாகரனைக் கொன்றொழிப்பதற்காகக் கண்மண் தெரியாமல் தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகளை ஏவியதில் அப்பாவித் தமிழ் மக்கள் நாற்பதாயிரம் பேர்கள் கொல்லப்பட்டார்கள். அதேவேளை தொண்ணூறாயிரம் பேர் அங்கவீனர்களானதும், எண்பத்தொண்பதாயிரம் பெண்கள் விதவைகளானதும பதிவுகளாகி உள்ளன.

இத்தனைக்குப் பின்பும் இந்தியாவின் கொலை வெறி அடங்கியதாகத் தெரியவில்லை. தூக்குத் தண்டனைக்காக வைத்திருக்கும் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரண தண்டனையை நீக்கி மன்னிப்பு வழங்கும்படி சோனியா காந்தியிடம் மன்றாட்ட மனுச்செய்திருந்தும், அதுவிடயத்தில் இந்தியா அக்கறை செலுத்தாமல் தமிழ் நாட்டிடம் ஒப்படைத்துள்ளது.

இச்சமயத்தில் அவர்களை விசாரணைக்குட்படுத்திய புலனாய்வுத்துறை அதிகாரி விசாரணைகளின் சீத்துவக் கேட்டைப் போட்டுடைத்துள்ளார். அதற்காக விசாரணைகளைத் திரும்ப நடாத்தக் கூடாதென மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். 22 வழக்கு விசாரணை முழுவதும் உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்ட நிலையில் அரச உயரதிகாரிகள் பதவியில் இருக்கும்போது ஒரு கருத்தும், ஓய்வு பெற்ற பின்னால் வேறுவிதமாகவும் சொல்பவற்றை வைத்து திடீரென மறுவிசாரணை கோருவது சரியானதல்ல என அவர் பகர்ந்திருப்பதும் எதனைச் சொல்கிறது.

அநேகமாக ஒரு விடயத்தை ஒரு தடவை சொன்னால் புரிந்து கொள்ளாதவனுக்கு நூறு தடவை சொல்ல வேணுமெண்டதையல்லவா? ஒரு உயிரைக்காவு கொண்ட விடயத்தில் இந்தியா இத்தனை உயிர்களைக் காவு கொண்டும், இன்னமும் கொலை வெறி அடங்கவில்லை எண்டும், இதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ன நான் சொல்லுறே விளங்குதெல்லே...

# ‘கம்பனில் நான்’ நூல் வெளியீடு இன்று

(யாழ்.நிருபர்)

கலாநிதி அகளங்கன் எழுதிய ‘கம்பனில்நான்’ என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான ஜ.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராசா ஆகியோரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம், வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தலைவர் நா.சேனாதிராசா வவுனியா இந்து மாமன்றத் தலைவர் செ.தேவராஜா செயலாளர் சி.எஸ்.இராமஸ்வாமி வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரி.கே.இராசலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (10)

# தொடர்கிறது போராட்டம்


‘யாழ்.போதனாவைத்தியசாலை தொண்டர் பணியாளர்களின் பணிப்பகீஸ்கரிப்புப் போராட்டம் நான்காவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.


யாழ்போதனாவைத்தியசாலையின் புதிய நான்குமாடிக்கட்டாத்திற்கு முன்பாகவே அவர்களது போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இவர்களது பணிப்பகிஸ்கரிப்புப் போராட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியாசாலையின் நாளாந்த நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இதற்கும் சுகாதாரத் தொழிலாளர்களே மேலதிகமாக கடமையாற்ற வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper


## திரிகோண கணிதம்

1. பின்வரும் படங்களில் $\sin\theta$, $\cos\theta$, $\tan\theta$ காண்க.





2. 

படத்திலிருந்து $\sin 60^0, \cos 60^0, \tan 60^0$ காண்க

3) 

படத்திலிருந்து $\sin 30^0, \cos 30^0, \tan 30^0$ காண்க

4) 

படத்திலிருந்து $\sin 45^0, \cos 45^0, \tan 45^0$ காண்க


5) அட்டவணை நிரப்புக.

| θ | $30^0$ | $45^0$ | $60^0$ |
|---|---|---|---|
| Sin θ | | | |
| Cos | | | |
| Tan θ | | | |


6) பின்வருவனவற்றின் பெறுமானம் காண்க.

a) $\sin 30^0 \cos 60^0$　　b) $\sin 60^0 \cos 30^0$
c) $\tan 30^0 \tan 60^0$　　d) $\tan 60^0 \sin 60^0$
e) $\sin 30^0 \cos 60^0$　　f) $\sin 30^0 \cos 60^0 + \sin 45 \cos 45^0$
g) $\sqrt{2}\sin 45^0 + \sqrt{3}\tan 60^0 + \sqrt{3}\sin 60^0 + \sqrt{3}\cos 60^0$


7) பின்வருவனவற்றின் பெறுமானம் காண்க.





8) 100 m நூலைப் பயன்படுத்தி, பையன் பட்டம் ஏற்றினான். என்ன தூரத்தில், என்ன உயரத்தில் பறக்கிறது?





9) படத்தில்
i) AD　ii) BD　iii) DE　iv) DC
v) AE　vi) BC காண்க




10) படத்தில்
1) AB　2) AC
3) BD　4) CD　5) AD ஐக் காண்க.




11) படத்தில் x, y ஐக் காண்க





12) 10 cm ஆரையுள்ள வட்டத்தில் 16 cm நீளமான நாண் உள்ளது. மையத்திலிருந்து நாணுக்கு வரையும் செங்குத்துத் தூரம் என்ன?

13) வட்டத்தின் மையம் O. நாண் AB யின் நடுப்புள்ளி P. AB = 24 cm. OP = 5 cm ஆரை என்ன?


14) வட்டத்தின் மையத்திலிருந்த 8 cm நீளமான நாணுக்கு வரையும் செங்குத்துத் தூரம் 3 cm எனின், 6 cm நீளமான நாணுக்கு வரையும் செங்குத்துத் தூரம் என்ன?

15) 13 cm ஆரையுள்ள வட்டத்தின் மையத்தின் எதிர்ப்புறங்களில் 24 cm, 10 cm சமாந்தர நாண்கள் உண்டு. நாண்களுக்கு இடைப்பட்ட தூரம் என்ன?


16) பெரிய வட்ட ஆரை 15 cm. சிறிய வட்ட ஆரை 13 cm எனின், OX = 12 cm. PQ காண்க.





17) உருவில் x, y மையம். AB பொது நாண்
i) $\triangle AXY \equiv \triangle BXY$
ii) $\triangle A\hat{X}N = \triangle B\hat{X}N$
iii) $\triangle AXN \equiv \triangle BXN$
iv) $A\hat{N}X = 90^0$ என நிறுவுக.





18) P,Q மையங்கள்
PN ⊥ AB
QM ⊥ BX எனின்,
2PQ = AB என நிறுவுக




19) AB, CD நாண்கள் செங்குத்தானவை. AB, CD யின் நடுப்புள்ளி X,Y OXNY செவ்வகம் என நிறுவுக.




20) O வை மையமாகவுடைய வட்டத்தில் AB நாண். நடுப்புள்ளி N
i) $\triangle A\hat{N}C \equiv \triangle BNC$
ii) AC = BC என நிறுவுக.




21) ரூ. 800 இற்கு வாங்கிய பொருளை ரூபா. 1000 இற்கு விற்றால் இலாபம் என்ன? இலாப வீதம் என்ன?

22) ரூபா 500 இற்கு வாங்கிய பொருளை ரூபா 560 இற்கு விற்றால் இலாபம் என்ன? இலாப வீதம் என்ன?

23) ரூபா 600 இற்கு வாங்கிய பொருளை ரூபா 540 இற்கு விற்றால் நட்டம் என்ன? நட்ட வீதம் என்ன?

24) ரூபா 900 இற்கு வாங்கிய பொருளுக்கு 22 1/2 % இலாபம் வைத்து விற்றான் இலாபம் என்ன? விற்ற விலை என்ன?

25) ரூபா 1500 வாங்கிய பொருளுக்கு 15% நட்டத்துடன் விற்றான். நட்டம் என்ன? என்ன விலைக்கு விற்றான்?

26) 10 % இலாபத்துடன் ரூபா 880 விற்றான் கொள்விலை என்ன?

27) 15 % நட்டத்துடன் ரூபா 510 விற்றான் கொள்விலை என்ன?

28) 12 1/2 % இலாபத்துடன் ரூபா 900 இற்கு விற்றால் கொள்விலை என்ன?

29) ஆண்டு ஒன்றுக்கு 12% வட்டிப்படி ரூபா 5000 இத்துக்கு 6 வருட எளிய வட்டி என்ன?

30) ஆண்டு ஒன்றுக்கு 15% வட்டிப்படி ரூபா 6000 இற்கு 5 1/2 வருட எளிய வட்டி என்ன?

31) என்ன வட்டி வீதப்படி ரூபா 8000 இத்துக்கு 4 வருடங்களில் எளியவட்டி ரூபா 4800 ஆகும்.

32) என்ன முதலுக்கு 14% வட்டிப்படி ரூபா 4200...... எளியவட்டி 4 வருடங்களில் கிடைக்கும்.

33) ரூபா 6000 த்துக்கு 7.2 % வட்டிப்படி எத்தனை வருடங்களில் எளியவட்டி ரூபா 2160 கிடைக்கும்?

34) 10% வட்டிப்படி 5 வருடங்களில் என்ன முதலுக்கு வட்டியும் முதலும் ரூபா 6000 ஆகும்.

35) எண்ணும் எண்கள் எவை? 1, 2, 3, 4,5,6 ..........

36) இயற்கை எண்கள் எவை? 0,1, 2,3 ...................

37) நிறை எண்கள் எவை? -3, -2, +1,+ 2 ,+3, ............

38) பின்வருவனவற்றை தசம எண்களாகத் தருக.

1) $\frac{1}{2}$ 2) $\frac{3}{4}$ 3) $\frac{3}{10}$ 4) $\frac{4}{25}$

5) $5\frac{3}{20}$ 6) $3\frac{5}{8}$

39) பின்வருவனவற்றை மீளும் தசமங்களாகத் தருக.

1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{6}$ 3) $\frac{3}{7}$ 4) $\frac{5}{11}$

5) $\frac{5}{9}$ 6) $\frac{5}{7}$

40) பின்வரும் முடிவுறு தசமங்களை பின்னங்களாகத் தருக.

1) 0.6 2) 0.25 3) 0.375 4) 0.025

41) பின்வரும் மீளும் தசமங்களை பின்னங்களாகத் தருக.

1) $0.3^0$ 2) $0.5^0$ 3) $0.45^0$ 4) $0.18^0$

42) வசனங்களைப் பூர்த்தியாக்குக.

1) முழு எண்கள் யாவும் பின்னமாக ................................
2) முடிவு தசமங்கள் யாவும் பின்னமாக ...............................
3) மீளும் தசமங்கள் யாவும் பின்னமாக .........................
4) முடிவுறு தசமங்கள், மீளும் தசமங்கள், முழு எண்கள் யாவும் பின்னமாக ................................

43) Q = { x : x= p/q P , QEZ Q≠O} இது எவ் எண்ணுக்கான வரையறுப்பு.

44) முடிவுறாத் தசமங்கள் பின்னங்களாக மாற்றலாமா?

45) விகிதமுறு எண்களைத் தெரிக

1) 8 2) -7 3) 0.8 4) 0.450 5) 0.37777 ..........

46) $\sqrt{2}$ = 1.4143728 ............... முடிவுறாத தசமம் இதனை பின்னமாக மாற்றலாமா?

47) இவற்றில் விகிதமுறு எண்கள் எவை விகிதமுறாதவை எவை?

1) $\sqrt{2}$ 2) $\sqrt{3}$ 3) $\sqrt{4}$

4) $\sqrt{5}$ 5) $\sqrt{6}$ 6) $\sqrt{7}$ 7) $\sqrt{8}$ 8) $\sqrt{9}$

48) இவற்றில் விகிதமுறு எண்கள் எவை?

1) 0.73 2) 0.673 3) 7.32

4) 0.15 5) 0.171771777 ....................

6) $\frac{22}{7}$

7) 3.1432786 ........................................

49) பின்வரும் பத்தின் அடி எண்களை இரண்டின் அடியில் தருக.

1) 57 2) 83 3) 123 4) 157

50) பின்வரும் துவித எண்களை அடி பத்தில் தருக

1) $11011_{\text{இரண்டு}}$ 2) $101011_{\text{இரண்டு}}$

3) $110111_{\text{இரண்டு}}$ 4) $10010_{\text{இரண்டு}}$

51) பின்வரும் எண்களை அடி 3 இல் தருக

1) 34 2) 59 3) 67 4) 143

52) பத்தின் அடியில் தருக

1) $212_{\text{மூன்று}}$ 2) $1212_{\text{மூன்று}}$ 3) $2121_{\text{மூன்று}}$ 4) $1022_{\text{மூன்று}}$

53) அடி நான்கில் தருக.

1) 28 2) 39 3) 63 4) 77

54) அடி பத்தில் தருக

1) 1321 நான்கு 2) 2103 நான்கு

3) 3123 நான்கு

55) கூட்டுக.

1) $11011_{\text{இரண்டு}}$
$1101_{\text{இரண்டு}}$

2) $101011_{\text{இரண்டு}}$
$11110_{\text{இரண்டு}}$

2) $101110_{\text{இரண்டு}}$
$10111_{\text{இரண்டு}}$

56) கழிக்குக

1) $100_{\text{இரண்டு}}$
$1_{\text{இரண்டு}}$

2) $110_{\text{இரண்டு}}$
$11_{\text{இரண்டு}}$

3) $11010_{\text{இரண்டு}}$
$1011_{\text{இரண்டு}}$

57) கூட்டுக

1) $2122_{\text{மூன்று}}$
$121_{\text{மூன்று}}$

2) $1221_{\text{மூன்று}}$
$112_{\text{மூன்று}}$

3) $2332_{\text{நான்கு}}$
$133_{\text{நான்கு}}$

58) கழிக்குக

1) $200_{\text{மூன்று}}$
$21_{\text{மூன்று}}$

2) $3200_{\text{மூன்று}}$
$313_{\text{மூன்று}}$

3) $2321_{\text{நான்கு}}$
$132_{\text{நான்கு}}$

60) கட்டடம் ஒன்றின் ஆண்டுப் பெறுமானம் ரூபா 75,000 ஆண்டு வரி 16%

a) ஓராண்டு வரி என்ன?
b) காலாண்டு வரி என்ன?

61) ஆண்டுப் பெறுமானம் ரூபா 60,000 காலாண்டு வரி ரூபா 2,250 ஆண்டு வரி வீதம் என்ன?

62) காலாண்டு வரி ரூபா 840. ஆண்டு வரி 7% ஆகும். ஆண்டுப் பெறுமானம் காண்க.

63) ரூபா 800,000 பெறுமதியான காரை இறக்குமதி செய்யும்போது சுங்க வரி 30%

a) சுங்க வரி என்ன? b) சுங்கவரியுடன் விலை என்ன?

64) சுங்க வரி 30% சுங்க வரியான ரூபா 22,500 கொடுத்தால், சுங்க வரி கொடுக்கமுன் விலை என்ன?

65) சுங்க வரி 25% சுங்கவரியுடன் விலை 1 125 000 எனின் விலை என்ன?

66) ரூபா 40 000 சலவை இயந்திரத்துக்கு (vat) வற்வரி 15% எனின்

1) வற்வரி என்ன?
2) வற்வரி செலுத்தியபின் விலை என்ன?

67) வற்வரி 10% வற்வரியுடன் விலை ரூபா 27,500 எனின், வற்வரி செலுத்தமுன் விலை என்ன?

68) ரூபா 25000 இற்கு வரி விலக்கு. அடுத்த 25,000 இற்கு 8% வருமான வரி, மீதிப் பணத்துக்கு 15% வருமான வரி. ரூபா 90 000 இற்கு வருமான வரி என்ன?

69) முதல் ரூபா 20 000 இற்கு வரி விலக்கு. அடுத்த ரூபா 25 000 இற்கு 10% வருமான வரி. மீதிக்கு 20% வருமான வரி. வருமான வரியாக ரூபா 9500 செலுத்தினால் மொத்த வருமானம் என்ன?

70) ஆயுட் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 20 வயதுடைய ஒருவர் 30 வருட காலத்துக்கு காப்புறுதி செய்தால் ரூபா 1000 இற்கு காப்புறுதித் தவணைப் பணம் ரூபா 40.

1) ரூபா 80,000 இற்கு வருடாந்த தவணைப் பணம் என்ன?
2) மாதாந்த தவணைப் பணத்தில் செலுத்துவதெனின் வருடாந்த தவணைப் பணத்தின் 12% செலுத்த வேண்டும். மாதாந்த தவணைப் பணம் காண்க.

# ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு வளம் சேர்த்த முதறிஞர்

## சொக்கன் நினைவுச் சிமிழ் விருதுரை

நீறுபூத்த நெற்றி, நீறதன் மேற் பொருட்டு, புன்னகை தவழும் முகம், சிந்தனையின் ஆழத்தைக் காட்டும் அகனற நெற்றி, எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள், வார்த்தையின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல் உள்ளத்தைப் போல தூய வெள்ளை ஆடை இத்தனை திருக்கோலத் துடன் எம்மத்தியில் வாழ்ந்த ஓர் அறிஞன் ஓர் சிந்தனாவாதி, மாபெரும் கலைஞன், மாமனிதன் தான் அமரர் சொக்கன் ஐயா.

இன்று சொக்கனின் வளர்ச்சியையும் வரலாற்றையும் நாம் நோக்கவில்லை. அவர் வளர்த்த ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுப் பின்னணியைத்தான் பார்க்கின்றோம்.

**சமயம்**

சொக்கனின் இந்துசமய நூல்களை எடுதது நோக்கும்பொழுது அறிவு தெளிநத நிலைமையில் எளிமை தானே கைவரும் எனபதற்கு இந்த நூல்கள் சிறந்த சான்றாக உள்ளன. எமது சைவ சமயம் வைதீக நெறி எனவும் வழங்கும் எனத் தெளிவாக உரைத்துள்ளாா. சமயத்தைத் தத்துவ ரீதியில் மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் அணுகுவதென்பது அத்துணை எளிதான காரிய மன்று. இந்தப் பணியைச் சொக்கன் சிறப்பாகச் செய்துள்ளார். "சைவம் வளர்ந்த தையலர்" என்ற நூலும் சிவ மணமும் தமிழ் மணமும் வீசிக் கற்போர் உள்ளங்களில் என்றும் இடம் பெறும் என்பதில் மிகையொன்றுமில்லை.

அடுத்து "அறநெறிப்பா மஞ்சரி (1969) குறிப்பிடத்தக்கதொரு தொகுப்பு நூலாகும. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற் கேற்ற அறநெறி சார்ந்த நன்மொழிகளைச் சங்க காலத்திலிருந்து இன்றுவரை எழுந்த அறநெறிப் பாடல்களிலிருந்து தொகுத்துத் தருகின்றது. இந்நூல் கல்வி, வீரம், கடமை, நன்றி, ஒப்புரவு, அன்பு முதலான பண்புகளின் உயர்வு பற்றிக்கூறும் அரிய பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. மனித சமுதாயத்தின் ஒழுக்கவியலை மேமபடுத்தும் வகையிலும் பண்பாட்டினைச் செம்மை யுறச் செய்வதிலும் இந்நூல் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றது.

சொக்கனின் "பாரதி பாடிய பராசக்தி (1947) என்ற நூல் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட பல்துறை சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பு நூல். இதில் சாகதநெறி பற்றியும் அவரது பேரிலக்கியம் பற்றியும் சிறப்பாக எடுத்துககூறப்படுகின்றன. மாநிலம் பயனுறுவதறகு இறைபக்தி அவசியமென்பதை இக்கட்டுரையின் வாயிலாகச் சொக்கன் வற்புறுத்துகிறார்.

நல்லூர்க்கந்தன் மீது பாடிய நல்லூா நான் மணிமாலை (1966) நல்லூர்க் கந்தன் மீது இவர் பாடிய பாடல்களும் எழுதிய கட்டுரைகளும் இவர் ஒரு சிறந்த முருக பக்தர் என்பதைக் காட்டி நிற்கின்றன. பல விபரங்களை இவை தருகின்றன. பக்திச்சுவை நிரம்பியது இவரது நான் மணிமாலை வெண்பா, க்லித்துறை, விருததம், அகவல் ஆகிய பாவடிவங்களில் முருகன் பெருமையைப் பேசுகின்றார்.

இலங்கையில் முருகவழிபாடு 1982 என்ற கட்டுரையும், வீரகேசரியில் வெளிவந்த நாடுவார் வினைபோக்கும் நல்லைக்கந்தன் என்ற கட்டுரையும் ஈழநாடு பத்திரி கையில் வெளிவந்த நல்லை நகர்க் கந்தப் பெருமானும் அழகுத் தத்துவமும் என்ற கட்டுரையும் ஈழத்து முருக வழிபாடு பற்றிய அறிவை அகலவைக்கின்றன.

தெல்லிப்பளை அருள்மிகு துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 1981 இல் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த மகா சமாஜ சைவ சித்தாந்த மகாநாட்டில் "திருமந்திரம் காட்டும் வாழ்வு" என்ற தலைப்பில் சொக்கன் ஆற்றிய உரையும் கட்டுரையாக வெளிவந்தது.

திருமந்திரம் அனைவரது வாழ்விற்கும் காட்டும் பொது நெறியை ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகின்றார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நடந்த சைவமகா நாட்டுக் கவியரங்கில "அபபரின் அன்புள்ளம்" என்ற தலைப்பில் இவர் பாடிய கவிதைகள் நூலுருப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் தலைச் சிறப்புக்களையும் கோயிலில் எழுந்தருளிய மூர்த்தியின் புகழையும் கூறும் ஊஞ்சற் பாடல்களும் சொக்கனின் ஆக்கங்களை அணி செய்கின்றன. 1968 ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட நல்லைநகர் தந்த நாவலா என்ற நூல் நாவலரது வரலாற்றினைச் சுவையும் பக்தியும் ததும்ப வெளிப்படுத்தியது எனலாம்.

**சிறுகதை**

சொக்கனின் சிறுகதைகளை எடுத்து நோக்கும்பொழுது பாடசாலை மாணவனாயிருந்தபோதே வள்ளி, குப்பையிலே மாணிக்கம் என்ற கதைகளை எழுதிய சிறுவனிடம் திறமையிருந்ததைப் பத்திரிகை ஆசிரியர்களும் சகபாடிகளும் கண்டு வாழ்த்தினார்கள். 1944 ஆம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். எப்பொழுதும் புதிய இளமையுட[illegible] எழுதிக்கொண்டிருந்தவர். இவருடைய சிறுகதைகள் அரசியல், சமூகம், வரலாறு, இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளைச் சார்ந்தன. ஈழகேசரியில் இவர் எழுதிய சிறுகதைகளுள் குட்டை நாய், மாணிக்கம், விநோத நணபன் முதலியவை குறிப்பிடக்கூடியவை.

இவை 1944 இல் எழுதிய சிறுகதை தான் பின் பதினாறாவது வயதில் 1946 இல் அப்போது மலையகத்திலிருந்து திருவாளர் மயில்வாகனன் வெளியிட்டு வந்த மின்னொலி சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசினை ஈட்டினார். சிறுகதையின் பெயர், கடைசி ஆசை. அக்காலத்தில இவரது எழுத்துக்கள் பத்திரிகை உலகாலும் வாசகர் உலகாலும் மிகவும் போற்றப்பட்டு வந்திருக்கின்றன.

1972.06.02 இல் சொக்கன் வெளியிட்ட முதலாவது சிறுகதைத் தொகுதியான கடலில் குட்டை நாய் (1961 இற்கும் 1972) இடைப்பட்ட காலகட்டக் கதைகளைத் தொகுத்துள்ளார்) 2004 இல் சொக்கன் சிறுகதை என்ற சிறுகதைத் தொகுப்பினை நயினை கி.கிருபானநதா வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் சொக்கனின் சிறுகதைகளில் இலக்கண வழுவற்ற செம்மை சார்ந்த தமிழில் பழந்த மிழர் பண்பாட்டினடியாக மானுட மேன்மை நோக்கையும் கலாவியக்தியையும் காண முடிகிறது.

**நாவல்**

நாவலிலக்கிய உலகில் சொக்கன் அவர்கள் 1949 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தவர். ஈழகேசரி இதழில் (1949.01-09-03-27) தொடராக வெளிவநத மலர்ப்பலி இவரது இத்துறைக் கன்னிப்படைப்பாகும் இதனைத் தொடர்நது அண்மைக் காலம் வரை செல்லும் வழி இருட்டு (1961), சதா (1962), ஞானக்கவிஞன் (1966), சலதி (1985), பக்திக் சந்த் (1985), முகங்கள் (1986) ஆகிய நாவல்களை இவர் தந்துள்ளார். இவற்றுள் ஞான கவிஞன், முகங்கள் என்பன குறுநாவல் என்ற வகைமைக குரியன. பத்திச்சந்த் வங்க நாவலொன்றின் தமிழாக்கமாகும். முகங்கள் குறுநாவல் ஈழமுரசு இதழில் தொடராக வெளிவந்தது. இறுதி அத்தியாயம் பிரசுரமாகாமல் நிறைவுறாத நிலையில் உள்ளது. இதனையும்மலர்ப்பலியையும் தவிர ஏனைய நூலுருப் பெற்றுள்ளன.

மேற்படி நாவல்களை அவற்றின் உள்ளடக்க அடிப்படையில் இருவகைப் படுத்தலாம். முதல் வகை சமகால சமூகக் கதையம்சம் கொண்டவை. மலர்ப்பலி, செல்லும் வழி இருட்டு, சதா, முகங்கள் எனபனவும் பத்தித்சந்தும் இவ்வகையின் ஏனைய இரண்டும் முறையே கம்பராமாயாணம், சிலப்பதிகாரம் என்பன எழுந்த காலச் சூழல்களைக் கற்பனை செய்து அமைத்த கதையம்சம் கொண்டவை.

**கவிதை**

சொக்கனின் கவிதைக் கலையை எடுத்து நோக்கும்பொழுது தனிப் பாட்டுக்களையும் பாட்டு நூல்களையும் எடுத்துக்கொண்டால் அவற்றில் பயிலும் சொல்லாட்சியும் இலக்கண முடிபுகளும் உள்ளடக்கமும், பொருளுருவமும் தொன்மையான நெறிகளைப் பின்பற்றி நடப்பதனை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். நான் மணிமாலை, பிள்ளைத்தமிழ், அந்தாதி, பதிகம், முதலான பிரபந்த வடிவங்களை அவர் கையாண்டுள்ளார்.

அருணகிரிநாதரின் திருப்புகழைப் பின்பற்றித் தாமும் நல்லைக்கந்தன் பேரிலே திருப்புகழ் பாடியுள்ளார் வேறொரு விதத்தில் சொல்வதனால் சொக்கனின் பாட்டுக்கள் முன்னை நூற் சார்புடையவை என்று கூறலாம். நாட்டுப்பற்றுடன் மொழிப்பற்றையும் இணைத்து அதற்குப் புதியதொரு பரிமாணத்தைத்தந்திட முயன்றுள்ளார்.

இது தவிர இறைவணக்கப் பாட்டுக்களையும் சமயஞ் சார்ந்த செய்யுள்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் இரு பிரபந்தங்கள் நல்லூர்க் கந்தன் மேல் எழுந்தவை. ஒன்று நான் மணிமாலை மற்றையது திருப்புகழ், துதிப்பாட்டுக்களுள் ஸ்ரீ முன்னேஸ்வர சேஷத்ர ஸ்ரீ வடிவாம்பிகா தேவி அந்தாதி குறிப்பிடத்தக்கது.

ஐம்பது கட்டளைக் கலித்துறைகளினால் ஆனது. ஸ்ரீமுன்னேஸ்வர ஹேத்திரம், ஸ்ரீமுன்னைநாத சுவாமி பதிகம் மேற்படி அநதாதியுடன் சேர்த்துப் பதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர சைவப் பெரியார் க.சிவபாத சுந்தரனார் மேல் சுருக்கமான பிள்ளைத் தமிழ் ஒன்றைச் சொக்கன் பாடியுள்ளார். சொக்கன் "நூலறி புலவர்" ஆகையால் செய்யுள வடிவம் பற்றிய முழுமையான விளக்கம அவரிடம் உண்டு. யாப்பில் வழுக்களைச் சொக்கனின் ஆக்கங்களிற் காண்பது அரிது.

**நாடகம்**

சொக்கனின் நாடகக் கலையை எடுத்து நோக்கும்பொழுது வரலாற்று நாட கங்களுக்குரிய பண்புகள் குறைவின்றி எழுதுதல் எல்லோர்க்கும் எளிதன்று. பாத்திரங்கள் தமது சூழ்நிலையிலே தோன்றி நடமாடவேண்டும். தமது காலத் திறகுப் பொருந்தச் சிந்தித்தும் உணர்ந்தும் பேசியும் செயலாற்றல் வேண்டும். வரலாற்றுப் பாத்திரங்களுடன் ஆசிரியர் தாமாகப் புனைந்துள்ள பாத்திரங்களை இணைக்கும் பொழுது அமைதியும் நிலவுதல் வேண்டும.

இவற்றைச் செய்து முடிப்பதற்கு வரலாற்று உணர்வும், நூற் புலமையும் நாடக நுணுக்கமும் பெரிதும் வேண்டற்பாலன. அவற்றைச் சொக்கன் குறிப்பிடத்தக்க அளவு பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். நாடகத்துறையை எடுத்து நோக்கும்போது நாடகம் முழுவதும் ஆசிரியரது இலக்கியப் பயிற்சியும் இசை இரசனையும் இழையோடுகின்றன. அவை கற்றோர்க்குப் பேருவகை தருவன. மற்றோர்க்கு இன்பம் அளிப்பன. "சிலம்பு பிறந்தது" சிலப்பதிகாரக் கதையைத் தழுவியது. சிறந்த இலக்கிய நடையில் எழுதப்பட்ட இந்நாடகம் குறிப்பிடற்குரிய சில அம்பங்களுடன் விளங்குகின்றது.

சொக்கன் நாடக ஆசிரியர் மட்டுமன்றி நாடக ஆய்வாளராகவும் விளங்குகின்றார். ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி என்னும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந் தனுடைய மேற்பார்வையிலே இவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த ஆய்வேட்டுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் முதுமாணிப் பட்டம் வழங்கியது. தானாக நாடகங்களை எழுதிய பொழுதிலும் மரபு வழி இலக்கியக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவர் நாடகங்கள் எழுதினார். கவிஞன் பரிசு, தெய்வப் பாவை போன்ற நாடகங்கள் இத்தகையனவே.

**பேச்சு**

சொக்கனின் பேச்சுக் கலை தமிழ் மேடைகளிலும் சமய மேடைகளிலுமே பெரும்பாலும் திகழ்கின்றது. தனியுரைகள், கருத்தரங்கு, உரைகள், பட்டி மண்டபப் பேச்சுக்கள் என இவருடைய பேச்சுத் துறைகளைப் பகுத்துக் கொள்ளலாம். இவ்வரங்குகளுக்குரிய உத்தி முறைகளையும் புத்தி முறைகளையும் தெரிந்து கொண்டு பேசும் வல்லமை இவரிடம் குடிகொண்டுள்ளது. மரபுத் தமிழ் அரங்குகளிலும் நவீன தமிழ்மேடைகளிலும் உறுதியாய் நிற்கக்கூடிய உரம் இவரிடம் உண்டு. நூல் வல்லமையாலும் நாவன்மையாலும் சொல்லமுதம் வழங்கிச் சபையோரைச் சுவையோராக்குவதல் கெட்டித்தனம் மிக்கவர் சொக்கன்.

**பாடநூல் எழுத்தாளர்**

அடுத்து பாடநூலாக்கம் என்பது அதுவும் சிறுவர்களுக்கான மொழிப் பாடத்துக்கான பாடநூலாக்கம் எளிதான செயல் அன்று. அதற்கு மொழி அறிவும் ஆற்றலும் இருந்தால் மட்டும் போதாது. குறிப்பிட்ட பாடநூல், பாடநூல்கள் எந்தப் பருவத்துப் பிள்ளைகளுக்கென ஆக்கப்படுகின்றது என்பன முதற்கண் தெளிவாகத் தெரிய வேண்டும். அத்தெளிவு ஆக்கப்படும் நூல் குறிப்பிட்ட பிள்ளைகளுடைய பருவத்துக்கும் பொருந்துவதாக அமைய உதவும்.

நூலைப் பயன்படுத்தப் போகின்ற பிள்ளைகளின் உளவியல் தேவைகள், நாட்டங்கள் என்பனவும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற அறிவின தரமும் நூலை ஆக்கும் ஆசிரியருடைய மனதில் பதிந்திருக்கவேண்டும். அப்போதுதான் ஆக்கப்படும் நூல் படிப்பவர்களுக்குப் பொருத்தமானதாகவும், பயனுடையதாகவும் அமையும். இவையெல்லாம் பொலியப் பெற்று விளங்கியவர் சொக்கன்.

**கட்டுரைக்கோவைகள்**

மாணவரோடு தொடர்புள்ள எல்லாத் துறைகளையும் தழுவியது கட்டுரைக் கோவை. இயற்சொற்களே பயிலும் எளிமை யான உரைநடை ஒழுங்கான பந்தியமைப்பு, செப்பமான குறியீடுகள் இவை கட்டுரைக் கோவையின் சிறப்பியல்புகள். இவ்வியல்புகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து கட்டுரைகள், கடிதங்கள், கற்பனைக் கதைகள், உரையாடல்கள், கூட்ட அழைப்புக்கள், அறிக்கைகள், பத்திரிகைச் செய்திகள ஆகிய பிரிவுகளில் கட்டுரைக் கோவை சிறப்புற அமைந்துள்ளது எனலாம். திருக்குறள் முழுவதற்கும் அவர் மொழிப்புரையும் எழுதியுள்ளார்.

**புனைபெயர்கள்**

கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் தன்னை மறைத்து தமிழ் உலகிற்கு சொக்கன், ஆராவமுதன், அடியவன், வேனிலான், தேன், சுடலையூர்ச் சுந்தரன், பொய்யாமொழியார், சோனா, திரிபுராந்தகன், கன்றுக்குட்டி, ஈழத்துப் பேய்ச்சாத்தன், பாலன் என்னும் புனைபெயர்களில் தமிழ் உலகிற்கு ஆற்றிய பணிகள் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

முத்தமிழ்த்துறை வல்லனாக இருந்து இலக்கிய உலகில் செஞ்கோலோச்சிய சொக்கன் ஐயா விழிக்குத்துணையான ஒளியல்ல வழியேயான ஒளி. இன்று தெய்வ ஒளியாய் திகழ்கின்றது.

*ஆக்கம் :- நயினை கி.கிருபானந்தா*
*செயலாளர்*
*யாழ். இலக்கிய வட்டம்.*

# போர்க்குற்றத்துக்கு மரணதண்டனை

# கலவரத்தில் சிக்கி 21 பேர் பலி



வங்களாதேஷின் ஜமாத் இஸ்லாமி கட்சியின் மூத்த தலைவர் அப்துல்காதர் மொல்லா (75). கடந்த 1971ஆம் ஆண்டு வங்களாதேஷின் தேச விடுதலைக்காக நடந்த போரின் போது இனப்படுகொலைகள் நடந்தன. பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். இக்குற்றங்களில் ஈடுபட்டதாக மொலலாவுக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. தீர்ப்பை மறு ஆய்வு செய்யக்கோரி மனு செய்யப்பட்டது. இந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செயதது. போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் மூத்த தலைவர் அப்துல்காதர் மொல்லா உட்பட 5 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதில் அப்துல் காதர் மொல்லா கடந்த வியாழக்கிழமை தூக்கிலிடப்பட்டார். 350 பொது மக்களை கொன்றதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அதற்கு முன்னதாக வங்காள தேசத்தில் உள்ள லஸ்மிர்பூரில் கலவரம் வெடித்தது. மொல்லாவுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றக் கூடாது என வலியுறுத்தி ஜமாத் இ-இஸ்லாமி கட்சியினர் போராட்டம் நடத்தினர். போராட்டம் கலவரமாக மாறியது. கலவரத்தை அடக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இச்சம்பவத்தில் 4 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். கடந்த 4 நாட்களாக வங்களாதேஷ் முழுவதும் பரவி வரும் கலவரத்தில் 21 பேர் பலியாகியுள்ளனர்.

கலவரத்தின் பின்னணியில் எதிர்கட்சித்தலைவர் கலிதா ஜியா உள்ளதாக குற்றச்சாட்டும் பிரதமர் ஷேக் ஹசீனா, "அப்பாவி மக்களை கொன்று அராஜகத்தில் ஈடுபடும் செயலை எதிர்கட்சியினர் நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உங்களை எப்படி கட்டுப்படுத்துவது என்று அரசுக்கு தெரியும்" என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# தன்னடக்கம் வியப்பை அளித்தது ரஜனி குறித்து சச்சின் பெருமிதம்



(புதுடில்லி)

தனியார் டி.வி. நடத்திய கருத்து கணிப்பில் மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நடிகர் ரஜினிகாந்த் குறித்து கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், அவரை சந்தித்ததில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அப்போது அவரது பணிவு மற்றும் தன்னடக்கத்தை பார்த்து வியப்படைந்தேன். அவரது நற்பண்புகளை உண்மையிலேயே பாராட்டுகிறேன்.

அவர் கிரிக்கெட் மீது ஆர்வம் மிக்க இரசிகர் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். கிரிக்கெட் விளையாட்டை அவர் உற்று நோக்கி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. பல்வேறு கிரிக்கெட் போட்டிகளை குறித்து விவாதித்தோம். குறிப்பாக இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான போட்டிகள் குறித்துப் பேசினோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடியில் இத்தாலிய அரசு

(ரோம்)

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இத்தாலி அரசு அதிலிருந்து மீள பல சிக்கன நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதிக்குமேல் திறமையற்ற அரசாங்க அதிகாரத்துவம், குறைந்த சொத்து உரிமைகள், பாதுகாப்பு மற்றும் ஊழல், கடுமையான வரிவிதிப்பு மற்றும் பொதுச்செலவுகள் போன்றவற்றால் ஏற்பட்டுள்ளதாக கணக்கீடுகள் காட்டுகின்றன.



இதனை எதிர்த்துவரும் மக்கள் புதிய தேர்தலையும், ஆளும் வர்க்கத்தில் மொத்த மாற்றத்தையும் வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தாலியின் முக்கிய நகரங்களான ரோம், டுரின் மற்றும் வெனிஸ் போன்ற நகரங்களில் நேற்று முன்தினம் இத்தகைய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

விவசாயிகளும், டிரக் டிரைவர்களும் இணைந்த போர்கோனி என்ற இயக்கம் இத்தகையப் போராட்டங்களில் ஈடுபட்டது. இதுதவிர, ஒருகாலத்தில தொழில்துறை நகரமாக விளங்கிய டுரினில் மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் காவல்துறையினரை நோக்கி பெயின்ட் குண்டுகளை வீசி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

போர்கோனி இயக்கம் வரும் புதன்கிழமை முதல் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடும் திட்டத்தில் உள்ளது. பெரிய சமூக அமைதியின்மையின் வெளிப்பாடாக இருக்கும் இந்தப் போராட்டங்கள் கவலை தரக்கூடியவையாகவுள்ளன என்று குறிப்பிட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஃபிளேவியோ சனோநாட்டோ நாட்டை சீராக்கும் செயல்பாடுகளை விரைவில் தொடங்கவேண்டும் என்று கூறினார். இந்த ஆத்திரத்தை மேலும் வளர்க்கக்கூடாது என்று நாடாளுமன்ற சபாநாயகர் லாரா போல்ட்ரினி எச்சரித்துள்ளார்.

# அடுத்த ஆண்டு முதல் டில்லிக்கு சோதனைக்காலம்



2014ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் தனிப் பெரும்பான்மையுடன் மத்தியில் நிலையான ஆட்சி அமையுமா என்பதை உறுதியாக சொல்ல முடியாது என மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

20ஆவது ஆண்டு விழாவை ஒட்டி, தேசியப் பங்குச்சந்தை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது அவர் இதனைத்தெரிவித்தார். நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கடும் பின்னடைவைச்சந்தித்த நிலையில் சிதம்பரம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2014- மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் நிலையான ஆட்சி அமையுமா என்பதை சொல்ல முடியாது.

ஒரு வேளை, 2014 தேர்தலுககுப் பின் நிலையான ஆட்சி அமைந்தால் பொருளாதாரப் பின்னடைவுகளில் இருந்து மீள முடியும். இந்திய ஜனநாயகம் கடந்த 60 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடுமையான சூழலை எதிர்கொணடுள்ளது.

நாடாளுமன்றம் முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் சட்ட அமைப்புகள் மூலமாகவே தீர்வு கிட்டி விடும் என்ற தவறான பார்வை நிலவுகிறது.

சில அமைப்புகளின் அதிகாரங்கள் செயல் அதிகாரிகளின் கைகளைக் கட்டி வைத்துள்ளன. நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்களை நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டுமே தவிர நீதிமன்றங்கள் பிரச்சினைகள் மீது தனிப்பட்டு முடிவு எடுக்கக் கூடாது. என்றார்."

உலகச் செய்திகள்

# காங்கிரஸ் சரிவுக்கு ராகுல்காந்தி காரணமா?

(வாரணாசி)

ராகுல்காந்தி செல்வாக்கு இழந்ததால் பிரியங்கா காங்கிரஸ் தலைவர் பதவிக்கு வருவார் என்று பாரதிய ஜனதா தலைவர் கூறினார். பாரதிய ஜனதா பொதுச் செயலாளர் இராமேஸ்வர் சவுரசியா வாரணாசியில் நிருபர்களிடம் கூறியதாவது:

காங்கிரஸ் கட்சியில் குடும்ப அரசியல் நடந்து வருகிறது. சோனியா காந்தியைத் தொடர்ந்து அவரது மகன் ராகுல் காந்தி அரசியலுக்கு கொண்டு வரப்பட்டார். அவருக்கு காங்கிரசில் துணைத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டது.



கட்சியில் அவர் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்பு காங்கிரஸ் தொடர்ந்து சரிவைச்சந்தித்து வருகிறது. ராகுல்காந்தியின் செல்வாக்கு சரிந்துவிட்டது. காங்கிரசில் ஒரு குடும்பத்தில் ஒருவரது செல்வாக்கு சரிந்தால் அதே குடும்பத்தில் இன்னொருவர் அரசியலுக்கு வரும் வழக்கம் இருக்கிறது.

இப்போது காங்கிரசில் பிரியங்காவை முன்னிலைப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர் தான் காங்கிரசின் தலைவராக நியமிக்கப்படுவார்.

ஆம் ஆத்மி கட்சி தலைவர்கள் கெஜ்ரிவாலும், யோகேந்திர யாதவும் காங்கிரசின் ஏஜெண்டுகளாக 20 ஆண்டாக செயல்பட்டு வந்தனர். அதனால் தான் வருமான வரித்துறை அதிகாரியாக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால் எந்த ஊருக்கும் இடமாற்றம் செய்யப்படாமல் நீண்ட காலமாக டில்லியிலேயே பணியாற்றி வந்துள்ளார். தற்போது ஏராளமான சிறிய கட்சிகள் தோன்றியுள்ளன. தொடக்கத்தில் அந்த கட்சிகள் பிரகாசமாக தெரியும். போகப் போக காணாமற் போய்விடும். அதுபோலதான் ஆம் ஆத்மி கட்சியும் சில வருடங்களில் மறைந்து விடும். இவ்வாறு அவர் கூறினார்.

## போராட்டம்...

இங்கு வாழ்க்கையின் மீது வெறுப்பை உண்டாக்கியதில் எல்லாம் எமக்கு பாத்திரம் இருக்கிறது என்பதை மறைத்து விடமுடியாது.

சமூகப்பொறுப்பற்ற அதிகார நோக்கங்களுக்காக மாபெரும் அழிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

புலம்பெயர்ந்தவர்கள் கணிசமான ஒரு பிரிவினருக்கு இது பற்றிய பிரக்ஞை எதுவுமில்லை. காரணம் விரும்பியோ, விரும்பாமலோ இந்த அவலத்தில் அங்கு வாழ்வு ஸ்தாபிதமாகியது.

எனவே இங்கு தமிழர்களின் ஆழ்மனதில் அவலம் தொடரவேண்டும். அல்லது அதனைச் சித்தரிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை

ஏனெனில் நாம் இழைத்த தவறுகள் பற்றி எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் இருப்பதை என்னவென்பது.

எமது ஜனநாயக விரோத செயற்பாடுகள், மனித உரிமை மீறல்கள் பற்றியும் எந்த பிரக்ஞையும் இல்லாமல் இருக்கிறோம்.

யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகியும் இந்த பிரக்ஞை வரவில்லை.

நாம் எமது தவறுகளால் என்னவெல்லாத்தையும் இழந்திருக்கிறோம் என்பதைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது.

அப்பழுக்கில்லாமல் இந்த சமூதாயத்தின் விடிவிற்காக போராடப்புறப்பட்டு துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டு கொல்லப்பட்டவர்கள், இந்தப் போராட்டம் அறப்போராட்டம் தான் என மானசீகமாக வரிந்து கொண்டு தவறாக வழிநடத்தப்பட்டு உயிரை மாய்த்தவர்களும் இந்த போரில் கொல்லப்பட்ட முகம் தெரியாத பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் விடுவிக்கப் படவேண்டும்.

எமது மனச்சாட்சியின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். எமது போலி முகத்திரைகள் கிழித்தெறிந்து உண்மைகளைத் தரிசிக்கத் தயாராக வேண்டும்.

# கோட்டை புகையிரத நிலைய பொது வசதிகள் அறை படுமோசம்

## கவனமெடுப்பார்களா அதிகாரிகள்?

(கொழும்பு)

வட பகுதியிலிருந்து கொழும்புக்கு புகையிரதம் மூலமாகச் செல்லும் பயணிகள் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள பொது வசதிகள் அறையில் நிலவும் குறைபாடுகளால் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் உள்ள பொது வசதிகள் அறை மிக மோசமான தரத்தைக் கொண்டுள்ள போதும் அது குறித்து எவ்வித அக்கறையையும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் எடுக்கவில்லையென பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொதுவசதிகள் அறையின் மேல்மாடியில் குளிப்பதற்கான வசதி, மலசல கூட வசதிகளைப் பெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு 100 ரூபா கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. கீழ் தளத்தில் ஒரு மணி நேரத்திற்கு 50 ரூபா கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

ஆனால் இங்குள்ள கழிப்பறை சுகாதாரமற்றதாகவே காணப்படுகின்றது. தண்ணீர் வரும் குழாயில் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் மிகக் குறைவாக வருவதுடன் மலசல கூடம், குழாய் நீர் இடங்கள் மிகவும் அசுத்தமான நிலையிலேயே காணப்படுவதாக. பயணிகள் சுட்டிக்காட்டுகின்ற னர்.

வெளி மாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு புகையிரதம் மூலமாக வரும் பயணிகள் பொது வசதிகள் அறையைப் பயன்படுத்த முடியாது கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தற்போது வட பகுதியில் இருந்து நாளாந்தம் நூற்றுக்கணக்கான பயணிகள் புகையிரதத்தில் கொழும்புக்கு வருகின்றனர்.

இந்நிலையில், அவசர தேவையாகவுள்ள பொது வசதி அறைகளின் குறைபாடு களை நிவர்த்திசெய்ய உரிய அதிகாரிகள் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனப் பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (90)

# இனந்தெரியாதோரால் ஹயஸ் சாரதி தாக்கப்பட்டார்

## வாகனமும் பலத்த சேதம்



(வடமராட்சி)

ஆவரங்கால் கிழக்கு மணல் பகுதியில் ஹயஸ் வாகனத்தைச் செலுத்தி வந்த நபரை இனந் தெரியாத சிலர் வழிமறித்து அடித்துள்ளதுடன், வாகனத்தையும் கடுமையாகச் சேதப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஹயஸ் வாகனம் வைத்துள்ள குறித்த நபரிடம் இனந்தெரியாத ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவரின் பேரில் தொலைபேசி யூடாகத் தொடர்புகொண்டு கிளி நொச்சிக்கு செல்லவேண்டும் வருமாறு கூறியுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் வாகனத்துடன் ஆவரங்கால் கிழக்கு மணல் பகுதியூடாக சென்றவேளை இனந்தெரியாத சிலர் வாகனத்தை வழிமறித்து நபரைத் தாக்கியுள்ளனர். அந்நபர் தப்பியோடியதையடுத்து வாகனத்தை அடித்து நொருக்கி முற்றாக சேதமாக்கி விட்டு சென்றுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (85,116)

## இராணுவத்திற்கு...

நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்: அது தவிர்க்க முடியாதது. ஆனால் மக்களின் குடியிருப்புக் காணிகளை இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்துவதை, சுவீகரிப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம். என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மீற்றும் மாகாண சபைகள், காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்களின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சி சபைகள் வெறும் அரசியல் நடத்தும் ஒரு சபைகளாகவும், அரசியல் தீர்மானங்களை எடுக்கும் சபைகளாகத்தான் இருக்கிறதே தவிர, கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு பிரயோசனமான திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவர்கள் பின் நிற்கிறார்கள்.

பொதுவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லா உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்தால் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தால் என்ன? அரசாங்கம் புறக்கணிக்கின்றது. நிதி ஒதுக்கீடுகளை செய்கிறதில்லை என்ற குற்றச்சாட்டை தொடர்ந்தும் திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருப்பார்கள். அது தங்களுடைய நிர்வாகத் திறமையற்ற விடயத்தை அல்லது மக்கள் மத்தியில் இருந்து எழும் விமர்சனங்களுக்கு பதில் சொல்வதற்கே "இந்தக் கதையைத் திருப்பித் திருப்பி சொல்வார்கள். நான் இங்கு சில புள்ளிவிபரமாகத் தர விரும்புகிறேன்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், உள்ளூராட்சிச் சபைகளுக்கு கணிசமான கோடிக்கணக்கான நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2009 ஆம் ஆண்டு 400 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. 2010 ஆம் ஆண்டு 410 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு 2,000 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2012 ஆம் ஆண்டு 1,450 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2013 ஆம் ஆண்டு 1,100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட, பிரதேச சபையின் நிர்வாகத்திற்கு ஊடாக நெல்சிப் எனச் சொல்லப்படுகின்ற உலக வங்கியின் கடனுக்கூடாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு ஊடாக செயற்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் கடந்த மூன்றாண்டுகளில் 1,755 மில்லியன் ரூபாய்கள் வீதி அபிவிருத்திக்காக செயற்படுத்தப்பட்டிருக்கிறது.

இதைவிட, அரசின் விசேட பல்வேறு திட்டங்களுக்கு ஊடாக 2009 ஆம் ஆண்டு 380 மில்லியன் ரூபாய்களும், 2010 ஆம் ஆண்டு 350 மில்லியன் ரூபாய்களும், 2011 ஆம் ஆண்டு 1,210 மில்லியன் ரூபாய்களும், 2012 ஆம் ஆண்டு 280 மில்லியன் ரூபாவும், 2013 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 2,520 மில்லியன் ரூபாய்கள் விசேட நிதி ஒதுக்கீடுகளுக்கு ஊடாக செயற்படுத்தப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 621 மில்லியன் ரூபாய்கள் மட்டும் மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதைவிட, கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு விசேட நிதி ஒதுக்கீடுகளின் ஊடாக, குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் 102 வீதிகள் 6,368 மில்லியன் ரூபாய்களில் புனரமைப்பதற்கான புனரமைப்பு செயல் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வடக்கு மாகாண சபை என்ன செய்கின்றது. மூன்று மாதங்கள் கிட்டத்தட்ட ஆகின்றது. உருப்படியாக ஏதாவது மக்களின் எதிர்கால உருவாக்கத்திற்கு ஏற்றவாறு நடைபெற்றிருக்கின்றதா? முதலமைச்சர் தொடக்கம் சகல உறுப்பினர்களும் நடைமுறைக்கு ஒவ்வாத வீர வசனப் பேச்சுக்களையே பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, கிடைக்கும் வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழரின்...

கூறினார். அயல் நாடுகளுடன் ஒரு கொள்கையைப் பின்பற்றி தொடர்புகள் மற்றும் பேச்சு வார்த்தைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

சீனாவுடான விடயங்களை கையாள்வதில் உள்ளார்ந்த சிக்கல்கள் இருந்தாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு மேலாண்மையான நிலைமை காணப்படுகிறது. சீனாவுடன் எல்லை தொடர்பான புதிய பிரச்சினைகள் எதுவுமில்லை என நிருபமாராவ் மேலும் தெரிவித்துள்ளார்.

## காணாமற்போனோர்...

முறைப்பாடுகள் அடங்குவதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாஸ தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர நான்காயிரத்து 307 பாதுகாப்பு உறுப்பினர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, காணாமற் போனோர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இம்மாதம் 31 ஆம் திகதி வரை ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளை இலக்கம் 9/8, சுரனிமல பிளேஸ், கொழும்பு - 6 என்ற முகவரிக்கு தபால்மூலமும் அனுப்பிவைக்க முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 0112 199 944 என்ற தொலைநகல் இலக்கத்திற்கும் முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## விடைபெற்றார்...

வர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோர் அவ ருக்கு அஞ்சலி செலுத்தினர்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையின சிறுபான்மை ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியவர் நெல்சன் மண்டேலா என்று அவருக்கு புகழாரங்கள் சூட்டப்பட்டன.

நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்கான நீண்ட பயணம் முடிந்து விட்டாலும் அவரது வழித்தடங்களைப் பின்பற்றி கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் தற்போதைய அதிபர் ஜேக்கப் ஜுமா கூறினார்.

தென்னாபிரிக்க மக்கள் அடுத்தவர்கள் மீது குற்றஞ் சொல்வதை நிறுத்திவிட்டு, மண்டேலாவை முன்னுதாரணமாகக் கொண்டு, அவர் எப்படி நாட்டை வ்ழி நடத்தினாரோ அதுபோல நாட்டை வழிநடத்த வேண்டும் என்று அவரது பேத்தி நண்டி தெரிவித்துள்ளார்.

மண்டேலாவுடன் சிறையில் இருந்த அஹ்மத் கத்ராடா, தான் ஒரு சகோதரனை இழந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். தனது வாழ்க்கை இப்போது சூனியமாக உள்ளதாகவும் பிரச்சினைகள் என்றால் யாரிடம் செல்வது எனத் தனக்குத் தெரியவில்லை என்றும் கூறினார்.

## ஆபிரிக்க...

நைரோபி நகரிலுள்ள வெஸ்ட் கேட் வர்த்தகக் கட்டடத் தொகுதி மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல், மற்றும் ஜோமோ கென்யாட்டா விமான நிலையத்தில் பரவிய தீயினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி இதன் போது அனுதாபம் தெரிவித்ததாக ஜனாதிபதியின் பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எந்த வகையிலும் பயங்கர வாதத்திற்கு அனுமதி வழங்க முடியாது என்க் கூறியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதற்கு எதிராக உலக நாடுகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கையின் பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி தொடர்பில் ஜனாதிபதி மகிழ்ச்சி வெளியிட்டதாக ஜனாதிபதி பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் மீள் குடியேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் பல ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கென்ய ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார்.

## சைவ உணவுப் பொருட்களுக்கு புதிய தரச்சான்றிதழ்

(கொழும்பு)

சைவ உணவுப் பொருட்களுக்கான புதிய தரச் சான்றிதழ் ஒன்றை இலங்கை தரநிர்ணய சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

எஸ்.எல்.எஸ்.- 1460 என்ற இந்தப் புதிய சான்றிதழ் சைவ உணவுப் பொருட்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் . சிற்றுண்டிச் சாலைகள் பேர்ன்றவற்றிற்காக விநியோகிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இலட்சினையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், அதற்குரிய நிபந்தனைகளைக் குறிப்பிட்ட நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் என இலங்கை தரநிர்ணய சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## 1417 பட்டதாரி...

மற்றும் அரச திணைக்களங்களில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக அபிவிருத்தி உதவியாளர்களாகக் கடமையாற்றி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதேச செயலர்கள் மற்றும் யாழ்.செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றைய தினம் 334 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாஸ் தலைமையில் நடந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கலந்து கொண்டு அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார். (பா)

## இலங்கை...

க்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி தெரிவித்திருந்தார். ஏற்படக்கூடிய நெருக்கடியான நிலைமைகளிலிருந்து மீள்வதற்கு இலங்கை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். நெருக்கடி நிலைமைகளின் போது இலங்கைக்கு உதவிகளை வழங்க ஜப்பான் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பிளவுபடுவதனை ஒருபோதும் விரும்பாது இந்தியா

## என்கிறது. ஐ.தே.க.



(கொழும்பு)

இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதனை இந்தியா ஒருபோதும் விரும்பமாட்டாது. இலங்கையில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வந்த யுத்தத்தை முடிப்பதற்கு இந்தியா எமக்கு ஆயுதங்களையும், செய்மதிகளையும் வழங்கியது. ஆனரல் இந்தியாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தினோமா? மாறாக சீனாவுடனேயே நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளோமென ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சுக்களின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே ஐ.தே.க. எம்.பி. காமினி ஜயவிக்கிரம பெரேரா இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்தியாவின் மாநிலங்களவைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி கண்டுள்ளது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்தியப் பொதுத் தேர்தலில் கடும் போக்குடைய இந்துத்துவ பாரதிய ஜனதாக்கட்சி வெற்றி பெறுவது நிச்சயமாகும்.

இது இலங்கைக்கு பாதிப்பாக அமைவதோடு தேர்தல் நடத்தப்பட்டால் காங்கிரஸுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும்.

மண்டேலா 27 வருடம் சிறைவாசம் அனுபவித்து விட்டு வெளியே வந்தவுடன் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதோடு வெள்ளைக்கார முன்னாள் ஜனாதிபதியை உப ஜனாதிபதியாக்கினார்.

அது மட்டுமல்லாது யுத்தம் தொடர்பில் உண்மையை அறியும் கமிஷனை நியமித்தார். இங்கு இவ்வாறானதொரு நிலை உருவாகுமா?

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் ஏற்படும் நிலைமையை உருவாக்கி விடாதீர்கள். அது பயங்கரமானதாக அமையும் என்றார்.

# துன்னாலையில் விபத்து: இளைஞன் படுகாயம்

(பொலிகண்டி)

இலங்கை கொம்ரெக் நிறுவன பாரம்தூக்கியும் (கிரேன்), மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை வேம்படி பூங்கா சந்தியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் துன்னாலை கிழக்கு ஆட்டுப்பட்டித்தெருவைச் சேர்ந்த விஜியகுமார் - விஜியகாந் (வயது - 27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

கொடிகாமத்திலிருந்து நெல்லியடி நோக்கி குறித்த பாரம்தூக்கி வந்துகொண்டிருந்ததாகவும், குறித்த இளைஞன் நெல்லியடியிலிருந்து வீடு நோக்கி சென்றுகொண்டிருந்ததாகவும், இதன் போதே இவ்விபத்து இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாகவே இளைஞன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (116)

# இராணுவம் மீது போர்க்குற்றச்சாட்டு அடிப்படை அற்றது என்கிறார் சம்பிக்க



(கொழும்பு)

இராணுவம் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

போரின் போது அப்பாவி தமிழ் மக்களை கொலை செய்யும் எண்ணம் இராணுவத்தினருக்கு இருக்கவில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இராணுவத்தினருக்கு தமிழ் மக்களை கொலை செய்ய வேண்டும் என்ற தேவை இருந்திருக்குமாயின் போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த ஆயிரக்கணக்கான புலிகளின் உறுப்பினர்களை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள் எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷியை சந்தித்த போதே அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளதாக அமைச்சரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்களை சுமத்துவது நியாயமற்றது. தவறான தகவல்களை கொண்டே இந்த போர்க் குற்றங்கள் முன்வைக்கப்படுகின்றன. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் இதுவரை அவர்களின் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

1971 ஆம் ஆண்டு வடக்கில் 20 ஆயிரம் சிங்களவர்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் தற்போது 800 பேர் மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். 30 வருடகால போரில் வடக்கு கிழக்கில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சிங்களவர்கள் வெளியேற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிணற்றில் குதித்து மாணவி தற்கொலை

(வவுனியா)

வவுனியா பண்டாரிகுளத்தில் மாணவி ஒருவர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, குறித்த மாணவி நேற்று முன்தினம் வவுனியா பண்டாரிகுளம் அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள தனது வீட்டுக் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார்.

இவ்வாறு இறந்தவர் உயர்தர வர்த்தகத் துறையில் கல்வி கற்கும் சந்திரராஜா நிசாளினி (வயது-18) என்பவராவார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் மேற்கொண்டார்.

# தென்பகுதி கடற்றொழிலாளி ஊர்காவற்றுறையில் மர்ம மரணம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவரது சடலம் நேற்று முற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

93/4 பிள்ளையார் வீதி, நீர்கொழும்பைச் சேர்ந்த செல்ரண்ட் பெரேரா (வயது - 62) என்ற கடற்றொழிலாளியின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் படகு ஒன்றில் ஊர்காவற்றுறை கரம்பன் துறைப்பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் இவர் மர்மமான முறையில் இறந்து காணப்பட்டதனையடுத்து இவரது சடலம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகவும், இவரது மரணம் குறித்து மருத்துவ பரிசோதனையின் நிமித்தம் சடலம் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# ஐரோப்பிய நாடுகள் மீன்வளத்தை அறுவடை செய்வதை தடுக்க திட்டம்

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் உள்ள மீன்வளத்தை ஐரோப்பிய நாடுகள் அறுவடை செய்வதை தடுப்பதற்காக, இலங்கையின் மீன்பிடித் துறைமுகங்களை சீனா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் படி, சீனா, டுபாய், ஜப்பான், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய ஆசிய நாடுகளின் மீன்பிடிக் கப்பல்களை இலங்கையின் மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து இயங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் அனைத்துலக நீர்ப்பரப்பில், மீன்பிடியில் ஈடுபடும் என்றும், அவற்றின் உற்பத்திகள் இலங்கையின் மீன்பிடித் துறைமுகங்கள் ஊடாக ஏற்றுமதி செய்யப்படும் என்றும் இலங்கையின் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சீனாவின் 20 மீன்பிடிக் கப்பல்களுக்கும், ஜப்பானின் எட்டு கப்பல்களுக்கும் இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. டுபாய் மீன்பிடிக் கப்பல்களுக்கும் இந்த வசதியை பெற்றுக் கொடுப்பதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏனைய நாடுகளுடனும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. அவர்கள் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்கவும், உள்ளூர் துறைமுகங்கள் ஊடாக மீன்களை ஏற்றுமதி செய்யவும் முடியும்.

துறைமுக கட்டணங்கள் மற்றும் ஏற்றுமதி வரி மூலம் இலங்கைக்கு வருமானம் கிடைக்கும். இந்தியப் பெருங்கடலில் 48 சதவீதமான மீன்வளம் ஆசிய நாடுகளல்லாத நாடுகளாலேயே, குறிப்பாக, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளாலேயே அறுவடை செய்யப்படுகின்றன., நல்ல வசதிகளைக் கொண்ட மீன்பிடிக் கப்பல்களால், 900 தொன் மீன்களை பிடிக்க முடியும்.

ஆனால், இலங்கையில் உள்ள மீன்பிடிப் படகுகளால், 50 தொன் மீன்களையே பிடிக்க முடியும். புதிய மீன்பிடி உடன்பாடு கூட்டுமுயற்சி அடிப்படையிலானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் தொடரும் உட்கட்சி மோதல்

## ஆளும் தரப்பாலேயே பிரேரணை தோற்கடிப்பு

(மானிப்பாய்)

ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்று ஆளும் தரப்பினாலேயே தோற்கடிக்கப்பட்ட சம்பவமொன்று வலி.தென்மேற்கு பிரதேச சபையில் இடம்பெற்றுள்ளது.

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் மார்கழி மாதத்திற்கான கூட்டமொன்று கடந்த வியாழக்கிழமை உபதவிசாளர் சண்முகம் சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் ஆளும்கட்சி உறுப்பினர் கௌரிகாந்தன் பிரேரணை ஒன்றினை முன்வைத்தார். சாதாரண கூட்டத்தின் அறிக்கைகள் கட்டர்யம் சாதாரண கூட்டத்தில் மாத்திரம் ஆராயப்படத் தேவையில்லை ஏனைய விசேட கூட்டங்களிலும் ஆராயலாம்,

அதே போல் விசேட கூட்டத்தின் அறிக்கைகள் கட்டாயம் விசேட கூட்டத்தில் மாத்திரம் ஆராயப்படத் தேவையில்லை ஏனைய சாதாரண கூட்டங்களிலும் ஆராயலாம் என்னும் பிரேரணையினை சபைக்கு முன்வைத்தார்.

இதற்கு சபையின் ஏனைய உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இருந்தும் இப் பிரேரணையினை உறுப்பினர்களின் எதிர்ப்பினையும் மீறி மீண்டும் கொண்டு வர முயற்சிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பிற்கு விடுமாறு கோரப்பட்டது.

16 உறுப்பினர்களைக் கொணட இச் சபையில் பிரேரணையானது வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஆதரவாக 4 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டது. (48)

# வவுனியா வடக்கு பகுதிகளில் தொடரும் யானைத்தொல்லை

(வவுனியா)

வவுனியா வடக்குப் பிரதேசத்தின் பல கிராமங்களிலும் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

புளியங்குளம், பழையவாடி, ஊஞ்சல்கட்டி, மருதோடை, குளவிசுட்டான் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு யானைகளின் அட்டகாசம் காணப்படுவதாக இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஊருக்குள் வரும் யானைகள் குடிமனைகளுக்குள் புகுவது, தென்னை, வாழை உட்பட பல்வேறு பயன்தரு மரங்களையும் சேதப்படுத்துவது உள்ளிட்ட பல அசௌகரியங்களை மக்களுக்கு ஏற்படுத்துகின்றன.

இதேவேளை புளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் தனியார் வகுப்பொன்றுக்கு சென்று வீடுதிரும்பிய மாணவியொருவரை யானை துரத்தியுள்ளது. பின்னர் பொது மக்களின் உதவியுடன் அந்த யானை துரத்தப்பட்டு மாணவி காப்பாற்றப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.